Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

## தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல. 32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 பங்குனி – 27 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ஸபர் 29 (09.04.2005) சனிக்கிழமை இதழ்:192



# பாதாளக் கல்லறையினுள் பாப்பரசரின் உடல் அடக்கம்!

(வத்திக்கான்)

நித்திய இளைப்பாற்றை அடைந்த பாப்பரசர் இரண்டாவது ஜோன் போலின் உடல் வத்திக்கானிலுள்ள சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தின் தரைக்குக் கீழ் அமைக்கப்பட்டுள்ள பாதாள அறையிலுள்ள கல்லறையில் நேற்று மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது.

பாப்பரசரின் உடலை நல்லடக்கம் செய்வதற்கான பணிகள் நேற்றுமுன்தினமிரவு தொடங்கியது. முதற்கட்டமாக மக்கள் வரிசையில் நிறுத்தப்பட்டனர். இதனால், பாப்பரசரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தவந்த லட்சக்கணக்கான மக்கள் ஏமாற்றமடைந்து கதறியழுதனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் உட்பட 200 இற்கும் மேற்பட்ட உலகத் தலைவர்கள் நேற்றுக்காலை வத்திக்கானிலுள்ள திறந்தவெளி அரும்பொருட் காட்சியக மைதானத்தில் ஒன்றுகூடி பாப்பரசருக்கு அஞ்சலி செலுத்தினர். இதன்போது விசேட பிரார்த்தனையும் நடத்தப்பட்டது.

இலங்கை நேரப்படி நேற்றுக்காலை 2 மணிக்கு பாப்பரசரின் உடல் நல்லடக்கம் செய்யும் பணி ஆரம்பமாகியது. அவரது புனித உடல், வெண்பட்டுத் துணியால் மூடப்பட்டு, விசேடமாகத் தயாரிக்கப்பட்ட பேழைக்குள் வைக்கப்பட்டது. இந்தப் பேழை மேலும் இரண்டு பேழைக்குள் வைக்கப்பட்டது. பின்னர் பாப்பரசர் பயன்படுத்திய பொருட்கள் வைக்கப்பட்டன. இதன்பின்னர் பேழைக்கு நறுமணப் பொருட்கள் தூவப்பட்டன. அதன்பின்னர் கர்த்தினால்கள் அஞ்சலிப் பாடல்களைப் பாடினர். அத்துடன், பிரார்த்தனையும் நடத்தப்பட்டது. இதனையடுத்து பாப்பரசரின் உடல் சென். (12 ஆம் பக்கம் பார்க்க)

# தேசியத் தலைவர் சார்பில் பாப்பரசருக்கு மலர்வளையம்!



(ரோம்)

நித்திய இளைப்பாற்றை அடைந்த கத்தோலிக்கத் திருச்சபையின் பாப்பரசர் இரண்டாம் ஜோன் போலுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் சார்பில் வத்திக்கானில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

அனைத்துத் தமிழீழ மக்கள் சார்பாகவும் – வத்திக்கான் சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் இத்தாலிய அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் இந்த மலர்வளையத்தை வைத்து அஞ்சலி செலுத்தி னார்.

# மூதூரில் புலிகளின் காவலரண் மீது நேற்று அதிகாலை திடீர் தாக்குதல்!

## ஆதரவாளர் பலி – ஒருவர் படுகாயம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூரில் - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பூநகர் முன்னணிக் காவலரண் மீது நேற்று அதிகாலை இராணுவச் சீருடையினர் நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் ஒருவர் உயிரிழந்ததுடன், மேலும் ஒரு துணைப் படை வீரர் படுகாயமடைந்தார்.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மூதூரில் மிகுந்தபுர இராணுவ முகாமில் இருந்து சுமார் 500 மீற்றர் தொலைவிலுள்ள பூநகர் பகுதி புலிகளின் காவலரணே தாக்கப்பட்டதாகும்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியின் இறுதிப் பகுதி முகாமான மிகுந்தபுரவில் இருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி முன்னரங்க காவல்நிலை அமைந்துள்ள பூநகருக்கு இடைப்பட்ட பகுதி இராணுவ சூனியப்பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப் பட் டுள்ளது.

இந்த இராணுவ சூனியப் பிரதேசத்தைக் கடந்துவந்த சீருடை தரித்த ஆயுதபாணிகளே புலிகளின் காவல்நிலை மீது திடீர் தாக்குதலை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலி (12 ஆம் பக்கம் பார்க்க)

## ராசிக்குழுவின் முன்னாள் உறுப்பினர் காத்தான்குடியில் சூட்டுக்குப் பலி

## பூநகர் காவலரண் தாக்குல் சம்பவத்துக்கு படையினர் – கருணா அணியே பொறுப்பு!

# யாழ். – கிளிநொச்சியில் நேற்று பூரண துக்கம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் இயல்புநிலைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நேற்று பூரண துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

கத்தோலிக்க திருச்சபையின் மேய்ப்பரான பரிசுத்த தந்தை இரண்டாம் ஜோன் போலின் பூதவுடல் நேற்று நல்லடக்கம் செய்யப்பட்டதை முன்னிட்டே முழுமையான துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. வீதிகள், கடைகள், தேவாலயங்கள், பாடசாலைகள் தோறும் கறுப்பு – வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டு, அனைத்து மக்களும் பாப்பரசரின் இழப்பின் துயரத்தை கத்தோலிக்க மக்களுடன் பகிர்ந்துகொண்டனர்.

இதேவேளை – நேற்று பாடசாலைகள் சிலவற்றிலும் மாணவர்கள் கறுப்புப்பட்டிகளை அணிந்து தமது கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டதுடன் – தனியார் நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் என்பவற்றிலும் கறுப்பு – வெள்ளைக்

## ராசிக்குழுவின் முன்னாள் உறுப்பினர் காத்தான்குடியில் சூட்டுக்குப் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - காத்தான்குடிப் பகுதியில் - பஸ்ஸில் பயணம் செய்துகொண்டிருந்த ராசிக் குழு முன்னாள் உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சேத்துக்குடி வாசியான எட்மன்ட் பாக்கியராசா என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இவர் ஈ.பி.டி.பி. அமைப்பிலிருந்து விலகி - ராசிக்குழுவுடன் இணைந்து செயற்பட்டதாகவும் பின்னர் அதிலிருந்தும் விலகியிருந்தாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பூநகர் காவலரண் தாக்குல் சம்பவத்துக்கு படையினர் - கருணா அணியே பொறுப்பு!

## திருமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன்

(திருகோணமலை)

மூதூர் - பூநகர் முன்னணிக் காவலரண் மீது நேற்று அதிகாலை நடத்தப்பட்ட தாக்குதலுக்கு - இராணுவத்தினரும், கருணா அணியினருமே காரணமெனத் தாம் கருதுவதாக, திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த புதனன்று மகிந்தபுர இராணுவ முகாமில் படையினருடன் இணைந்து செயற்படும் ஆயுதக்குழுவான கருணா குழு மற்றும் ஆழ ஊடுருவித் தாக்கும் விசேட படையினரும் நிற்பதாக தகவல் கிடைத்தது. இதுகுறித்து கண்காணிப் புக்குழுவிடம் முறைப்பாடு செய்தோம்.

இந்த முறைப்பாடு தொடர்பாக கண்காணிப் புக்குழுவினர் கூட்டுப்படைத் தளபதியுடன் தொடர்பு கொண்டனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

கொடிகள் பறக்கவிடப்பட்டு, அனைத்து மக்களும் பாப்பரசரின் இழப்பின் துயரத்தை கத்தோலிக்க மக்களுடன் பகிர்ந்துகொண்டனர்.

இதேவேளை - நேற்று பாடசாலைகள் சில வற்றிலும் மாணவர்கள் கறுப்புப்பட்டிகளை அணிந்து தமது கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்ட துடன் - தனியார் நிறுவனங்கள், பொது அமைப் புக்கள் என்பவற்றிலும் கறுப்பு - வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. யாழ்.செயலகத்தில் இலங்கை தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்து.

## திருகோணமலை - மேன்காமத்தில்

# ரோந்து அணி மீது தாக்குதல்: இராணுவச் சிப்பாய் படுகாயம்!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் எல்.டி.3 என அழைக்கப்படும் மேன்காமம் சிங்களக் குடியேற்றப் பகுதியில் நேற்றுக்காலை 11 மணியளவில் வீதி ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவ அணியொன்றின் மீது இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் தலையில் படுகாயமடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக திருகோணமலை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலனுக்கு பகல் 12 மணியளவில் தகவல் தெரிவித்ததாகவும் தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக உடனடி விசாரணைகளை கண்காணிப்புக்குழுவின் மேற்கொண்டுள்ளனர் என திருமலை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் தகவல் வெளியிட்டுள்ளனர். (10)

## நெதர்லாந்து வெளியுறவு அமைச்சு

# நிர்வாக இயக்குநருடன் தமிழ்ச்செல்வன் சந்திப்பு!

நெதர்லாந்து அரசின் வெளியுறவு அமைச்சக நிர்வாக இயக்குநர் ஹெர்மன் ஏ.ஸ்காப்பர் தலைமையிலான குழுவினரை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக்குழுவினர் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்பின்போது சுனாமியால் உயிரிழந்த தமிழ் உறவுகளுக்கான தனது இரங்கலை சு.ப தமிழ்ச்செல்வன் குழுவினரிடம் ஸ்காப்பர் பகிர்ந்துகொண்டார்.

சுனாமி நிவாரணத்துக்கான பொதுக்கட்டமைப்பு தொடர்பான விபரங்களை அனுப்பி வைக்குமாறு கொழும்புத் தூதரகத்திடம் தமது அரசு கேட்டுள்ளதாகவும் ஸ்காப்பர் கூறினார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# வரதர் அணி உறுப்பினர் ஒருவர் வவுனியாவில் சுடப்பட்டு காயம்!

(வவுனியா)

ஈ.பி.ஆர்.எல்.எப். வரதர் அணி உறுப்பினர்கள் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்தார். இன்னொருவர் காணாமற்போயிருப்பதாகத் தெரியவருகிறது.

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் வவுனியா - நாகர்இலுப் பைக்குளத்துக்கு சமீபமாக இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப். வரதர் அணி உறுப்பினரான சிவகுமார் யோகேந்திரன் (வயது 30) என்பவரே காயமடைந்தார்.

வவுனியா நகரிலிருந்து நாகர்இலுப்பைக் குளம் வீதியில் சென்று கொண்டிருந்தவேளை இனந்தெரியாத நபர்கள் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் தலை மற்றும் வயிற்றுப் பகுதியில் இவர் பலத்த காயமடைந்தார்.

காயமடைந்து வீதியில் கிடந்த மேற்படி நபர் பொலிஸாரால் மீட்கப்பட்டு, வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, (12 ஆம் பக்கம் பார்க்க)






இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# க.பொ.த சா/தர பரீட்சை பெறுபேறுகள்

கடந்த புதனன்று வெளியான கல்வி பொதுத்தராதர பத்திர சாதாரணதர பரீட்சையில் யாழ்ப்பாண மாவட்ட முன்னணி பாடசாலைகளின் சிறந்த பெறுபேறுகள் மேலும் சில

### பரு.மெதடிஸ்த பெண்கள் உ.த.பாடசாலை

| | | | | |
|---|---|---|---|---|
| அ.கலைவாணி | 10A | | | |
| இ.நித்தியா | 10A | | | |
| சி.நிலானி | 10A | | | |
| த.தமிழினி | 9A | B | | |
| உ.அனுசா | 9A | B | | |
| செ.சுகன்ஜா | 8A | 2B | | |
| சி.மாதுளா | 8A | | | |
| ந.தாட்சாயினி | 7A | 3B | | |
| ச.அலக்யா | 7A | B | | |
| சி.கோபிகா | 7A | | 2C | S |
| து.திருமகள் | 7A | 2B | | S |
| வி.சிந்துகா | 6A | B | 3C | |
| த.துவாரகா | 6A | B | 3C | |

### உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

| | | | | |
|---|---|---|---|---|
| சி.இலக்கியா | 10A | | | |
| சி.நர்மதா | 9A | B | | |
| தே.துசிந்தி | 9A | | C | |
| சு.பத்மகுமாரி | 6A | 4B | | |
| ச.கிருபாலினி | 6A | 2B | 2C | |

### யாழ்.இந்து மகளிர் கல்லூரி

| | | | | |
|---|---|---|---|---|
| ப.சிவபாஸ்கரி | 9A | B | | |

### நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்

| | | | | |
|---|---|---|---|---|
| க.முரளிதன் | 10A | | | |
| சு.தினேசன் | 7A | 2B | | S |
| இ.அர்ச்சனா | 6A | B | C | S |
| சி.ரிஷபன் | 5A | | 5C | |

### சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

| | | | | |
|---|---|---|---|---|
| த.உதயகௌரி | 7A | 2B | C | |
| ஜ.றவிந்தா | 6A | 2B | 2C | |
| ஆர்.றகுராம் | 6A | 2B | C | S |
| எஸ்.கிரேக்கா | 6A | 2B | C | S |

### தெல்லிப்பளை யூனியன் கல்லூரி

| | | | | |
|---|---|---|---|---|
| ச.ஜெயநீதன் | 9A | B | | |
| க.கீர்த்தனா | 8A | 2B | | |
| யோ.கேசிகா | 7A | 3B | | |
| சி.நிசாந்தி | 7A | B | 2C | |
| சொ.பிரேமலதா | 6A | 2B | 2C | |
| ச.சோபிதா | 5A | 2B | 2C | |
| க.பவித்திரா | 5A | | 5C | |
| உ.பிறேமிலா | 4A | 3B | 3C | |
| ச.சோபன் | 4A | 2B | 4C | |
| கு.சுகன்யா | 4A | 2B | 3C | S |

### மானிப்பாய் மகளிர் கல்லூரி

| | | | | |
|---|---|---|---|---|
| யே.ஜெயரஞ்சனி | 8A | 2B | | |
| எஸ்.துளசி | 6A | 3B | C | |
| ரீ.பிரியலதா | 5A | 3B | 2C | |
| எம்.வனிதா | 5A | 3B | C | S |
| கே.கஸ்தனி | 5A | B | 3C | S |
| ஆர்.துளசி | 4A | B | 3C | |

### மானிப்பாய் இந்துக் கல்லூரி

| | | | | |
|---|---|---|---|---|
| ரீ.துஸ்யந்தன் | 9A | B | | |
| எம்.சிவசங்கர் | 7A | B | C | S |
| எஸ்.விநோத் | 6A | 3B | C | |
| ஏ.றுக்ஷன் | 6A | B | 2C | |
| கே.ரகுலன் | 4A | 3B | C | S |
| பீ.துஷ்யந்தன் | 4A | 2B | 3C | |

### யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை

| | | | | |
|---|---|---|---|---|
| ரி.பிரதர்சன் | 2A | 2B | 4C | 2S |
| எல்.சுதர்சினி | A | 3B | 5C | S |
| எஸ். சந்திரிகா | A | 2B | 5C | S |
| பி.தனுஷா | A | B | 3C | 3S |

### யா.ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்

| | | | | |
|---|---|---|---|---|
| என்.லலித்குமார் | A | B | 2C | 4S |
| எஸ்.ரிஜிதா | A | B | C | 5S |
| பி.பார்த்தீபன் | A | | 2C | 3S |
| ரி.கிரிகரன் | | B | 3C | 3S |

(தொடரும்...)


## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இன்றுமுதல் அஜித், திரிசா நடித்த ஜி தினசரி 11.00, 3.00, 7.00 பு.நே.

புதுவருட அதிரடி வெளியீடாக பல வருடங்களுக்குப் பின்பு சூப்பர்ஸ்ராரின் மீண்டும் ஒரு புதிய படைப்பான

ஆசன முற்பதிவுகளுக்கு இன்றுமுதல்
நாகம்ஸ் பாட்டா
இல.10, நவீன சந்தை
சுன்னாகம்.
யாழ். பெயின் காடின்
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.




(C/3979)

## D C M

பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம்
(இந்து குருகுலம் முன்பாக)

A/L 2007

பிரிவு - II

பொருளியல் – வரதராஜன் இந்து நாகரீகம் – ஸ்ரீஸ்
கணக்கீடு – பாலவாசன் அளவையியல் – சுதன்
வணிகக்கல்வி – உமாகாந்த் புவியியல் – குமரன்
தமிழ் – நாகதமிழிந்திரன் ஆங்கிலம் – நிஷாந்தன்

ஆரம்பம் :- 16-04-2005
சனி 7.00 (ப.நே.)

(C/4036)

## பிரத்தியேக வகுப்பு

A/L 2007

புதிய பிரிவு

பொருளியல்
S.வரதராஜன்

ஆரம்பம் :- 11-04-2005
திங்கள் 4.00 மணி (பு.நே.)

D. C. M
பருத்தித்துறை வீதி
யாழ்ப்பாணம்
(C/4037)

## மனோகரா திரையரங்கு

பார்த்தீபன், காவேரி, மாஸ்ரர் அஸ்வின் மற்றும் பலர் நடித்த கண்ணாடிப் பூக்கள்

கா.நே 6.30, 9.30 (பு.நே)

யாழ்ப்பாணம்

06.04.2005 முதல் தனுஷ், ஸ்ரீதேவி, கருணாஸ் நடித்த

தேவதையைக் கண்டேன் (சிறந்த குடும்ப காவியம்)

கா.நேரம்: 10.30, 2.30 மட்டும் (பு.நே)

(சி-3978)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜய், ரவிகிருஸ்ணா, நதீஷா
நடித்த

சுக்ரன்

கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

(சி-3976)


## வலைபந்தாட்டபோட்டி

யாழ்.கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டி யாழ்.இந்து மகளிர் கல்லூரி வலைப்பந்தாட்டத் திடலில் இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாக உள்ளது.

தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் 15, 17, 19 வயதுப்பிரிவு மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர்.


## ராஜா யாழ்ப்பாணம்

கருணாஸ், ரிச்சா, தலைவாசல்
விஜய் மற்றும் பலர்
நடித்த

கையோடு கை

(சி-3980) பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

## நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது

இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு

தாவடி மைந்தன் (குளிரூட்டப்பட்டது)
ஜெய் ஆகாஷ், பிரணதி,
நாசர், தாமு, வையாபுரி நடித்த




கா.நே(பு.நே) ▷ 10.30, 2.30, 6.30, 9.30 (சி-3977)

## WEL COME MR.KARUNASENA
ACTG.GENERAL MANAGER / CHIEF EXECUTIVE OFFICER
PEOPLE'S BANK.



Your untiring service with love and dedication in the Bank is an inspiration to all Bankers. Your service to people's Bank in various fields from Branch manager to Deputy General Manager is praise worthy. We welcome you Mr.Karunasena.

KANDIAH & SONS
Building Contractors,
Konavalai Road,
Kokuvil East,
Kokuvil.

(1114)


## பாண் விலை குறைப்பு

450 கிராம் நிறை கொண்ட பாணின் விலை ருபா 20.00 இன்று (9-4-2005) தொடக்கம் 450 கிராம் நிறை கொண்ட 1 பாணின் விலை ரூபா 20.00 விற்கப்படும்.

மாவின் விலைக்குறைவு காரணமாக ஒரு பாணுக்கு ரூபா 2.00 இனால் குறைக்கப்பட்டுள்ளது. மாவின் விலை மாற்றியமையும் போது அதற்குரிய நிலையில் பா்ண் விலை மாற்றம் அடையும் என்பதை அறியத்தருகின்றோம்.

மா தேவையானவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும் (வெதுப்பக உரிமையாளர்கள்)

விலை, நிறை, தரம் ஆகியவற்றில் குறை இருந்தால் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகம்
யா.மா.உ.கூ.ச.வ.து

(1117)


நமது ஈழநாடு

SAAMSTECH இன் யாழ் மாவட்ட அனைத்து பாடசாலை மாணவர்களுக்கான

## இலவச ஆங்கில நேரடி வகுப்பு

ஆங்கிலத்தைக்கதைப்பதற்கான முழுமையான அடித்தளத்தை விருத்திசெய்யும் வகுப்பு

### இடம் : யாழ் மத்திய கல்லூரி

**09.04.2005 சனிக்கிழமை (இன்று)**

காலை 11.00 முதல் 12.00 காலை 12.00 முதல் 1.00 மாலை 2.00 முதல் 3.00 மாலை 3.00 முதல் 4.00 மாலை 4.00 முதல் 5.00

**10.04.2005 ஞாயிற்றுக்கிழமை (நாளை)**

காலை 9.00 முதல் 10.00 காலை 10.00 முதல் 11.00 காலை 11.00 முதல் 12.00 மாலை 2.00 முதல் 3.00 மாலை 3.00 முதல் 4.00 மாலை 4.00 முதல் 5.00

மேலுள்ள ஏதாவதொரு வகுப்பில் கலந்துகொள்ளலாம். அனுமதி இலவசம். ஒவ்வொரு வகுப்பிலும் 400 பேர் மட்டும் அனுமதிக்கப்படுவதால் நேரத்துக்கு சமுகமளிக்கவும்

**கலந்துகொள்ளும் அனைவருக்கும் மாணவர்களுக்கான ஆங்கிலக்கற்றலுக்கான புத்தகம் இலவசம்**

யாழ் மாவட்ட அனைத்துப்பாடசாலைகளையும் சேர்ந்த 6 ஆம் வகுப்பு முதல் க.பொ.த உ.த மாணவர்கள், இவ்வருட க.பொ.த சா.த பரீட்சையில் பெறுபேறுகளைப்பெற்றவர்கள் மற்றும் க.பொ.த உ.த பரீட்சையில் கலந்துகொள்ளவிருப்பவர்கள் அனைவரும் கலந்துகொள்ளலாம்

இந்த இலவச வகுப்பில் கலந்துகொள்ளும் மாணவர்கள் ஆங்கிலத்தில் கதைப்பதற்கான வேறுபட்ட சிந்தனையில் உருவான புதிய முறையினைக்கற்றுக் கொள்வதோடு பாடசாலைகள் தோறும் நடைபெறவுள்ள மாணவர்களுக்கான ஆங்கிலக் கற்கைநெறிக்கான புலமைப்பரிசில் பரீட்சைக்கும் தயார்செய்துகொள்ள முடியும்.

# இந்திய உளவுத்துறையுடன் ரணில் சந்தித்துப் பேச்சு!

(கொழும்பு)

இந்தியாவுக்குச் சென்ற எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை - புதுடெல்கியில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைக்கான உளவுத்துறை அதிகாரிகளும், பிராந்திய கட்டுப்பாட்டுக்கான "றோ" அதிகாரிகளும் கூட்டாகச் சந்தித்து சுமார் ஒரு மணிநேரமாகப் பேச்சு வார்த்தை நடத்தியதாகத் தெரியவருகிறது.

ரணில் விக்கிரமசிங்க தங்கியிருந்த விருந்தகத்துக்கு அருகாமையிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பின்போது இந்திய உளவுப்பிரிவினரால் பிராந்திய நாடுகளின் அரசியற் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டு நிதியில் அதிகபங்கை ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒதுக்குமாறு ரணில் கோரியிருப்பதாகவும், தாம் ஆட்சிக்கு வந்தால் இந்திய உளவுப் படையால் தற்போது பேணப்பட்டுவரும் உடன்படிக்கையில் மாற்றம் செய்யப்பட்டு, புதிய அதிக வசதிகளுடனான உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என்று அவர் உறுதியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிராந்திய நாடுகளின் அரசியற் கட்சிகளுக்கு இந்திய உளவுப்பிரிவான 'றோ' அமைப்பின் வருடாந்த நிதி ஒதுக்கீட்டில் - இலங்கைக்கு ஒதுக்கப்பட்ட புதிய நிதி ஆண்டுக்கான தொகையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டு அரசாங்கத்துக்கு அதிக நிதியையும், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சிறு தொகை நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி ஒதுக்கீட்டைத் தொடர்ந்து, இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அதைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவரும் இந்திய உயர் மட்ட அதிகாரிகளால் இந்தியாவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இருதரப்பு சந்திப்புகளிலும் இலங்கை மீதான இந்திய உளவுப் பிரிவான 'றோ' அமைப்பின் நடவடிக்கைகள் தொடர்பாகவே கலந்துரையாடப்பட்டதாகவும் தெரியவருகிறது.

## சர்வதேச நிதியுதவிகள்

# வடக்கு - கிழக்கு செல்வதை ஜே.வி.பி அனுமதிக்காதாம்!

(கொழும்பு)

உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற சர்வதேச அமைப்புகள் வடக்கு- கிழக்குப் பகுதிகளுக்கு நிதியுதவி வழங்குவதைத் தாம் அனுமதிக்கப்போவதில்லையென, ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

மகரகமவில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது -

வடக்கு - கிழக்குக்கான பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதானது, நாடாளுமன்றத்தின் கீழுள்ள நிதி அதிகாரங்கள் கையளிக்கப்படுவதற்கேயாகும்.

இது குறித்த தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை இரண்டாக்குவதென்பது, நாடாளுமன்றின் இறையாண்மையை இரண்டாக்குவதற்கு சமனாகும். இதற்கு நாடாளுமன்றில் நாம் இடமளிக்கமாட்டோம்.

அரசியலமைப்பின்படி நாடாளுமன்றத்தில் இருக்கும் நிதி அதிகாரங்களைக் கையளிப்பதற்கு எவருக்கும் உரிமையில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(தே)

# மட்டக்களப்பு - ஏறாவூரில் சுற்றிவளைத்து தேடுதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆறுமுகத்தான் குடியிருப்பு பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் காலை பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இந்தப் பகுதியில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே, இந்தத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாக ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தர்மசேன இரத்னாயக்க தெரிவித்தார்.

எனினும் இந்தத் தேடுதல் நடவடிக்கையின்போது, எந்தவித ஆயுதங்களும் மீட்கப்படவோ, ஆயுதங்களுடன் எவரும் கைது செய்யப்படவோ இல்லை எனத் தெரியவருகிறது.

நேற்றுமுன்தினம் காலை 6 மணி தொடக்கம் சுமார் 2 மணி நேரம் இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

# உலக வங்கி வழங்கிய நிதிக்கு என்ன நடந்தது?

## ஐ.தே.க கேள்வி எழுப்புகிறது

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்காக உலகவங்கி வழங்கிய 400 மில்லியன் அமெரிக்க டொலரை - எந்த வழியில் பயன்படுத்தியதென்பது குறித்து, அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஊடகப்பேச்சாளருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

வீடமைப்புக்காகத் தனியார் துறையினரையும் உதவுமாறு அரசாங்கம் கோரிக்கை விடுத்தமை பிரச்சினைக்குரியதாகும்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுக்க உலக வங்கி மட்டும் 400 மில்லியன் அமெரிக்க டொலர்களை அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை சுமார் ஒரு லட்சமாக உள்ளபோது - உலக வங்கியிடமிருந்து கிடைத்த நிதியை வைத்துக் குடும்பமொன்றுக்கு நான்கு லட்சம் ரூபாவை வழங்கமுடியுமென்பது இதன்மூலம் தெரியவருகிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா வழங்குவதாக அரசாங்கம் அறிவித்தபோதிலும், அதுகூட உரிய முறையில் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

தற்போது வீடுகளை அமைப்பதற்குத் தனியார் துறையினரும் ஈடுபடவேண்டுமென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னதாக உலக வங்கி வழங்கிய 400 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு என்ன நடந்தது. இந்த நிதி யாருடைய தேவைக்காகப் பயன்படுத்தப்படுகின்றதென்பதை அரசாங்கம் வெளியிடவேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சுனாமியால் வீடுகளை இழந்தோர் இன்று முதல் விண்ணப்பிக்கலாம்!

சுனாமி அனர்த்தத்தால் வீடுகளை முழுமையாக இழந்த குடும்பங்களுக்கு மீள்கட்டமைப்பிற்கு 2லட்சத்து ஐம்பதினாயிரமும் பகுதியாக வீடுகள் சேதமடைந்த குடும்பங்களுக்கு ஒரு லட்சமும் வழங்கப்படவுள்ளது.

எனவே இந்த சேதமடைந்த வீடுகளின் விபரங்களை பாதிக்கப்பட்டவர்களை சமர்ப்பிக்குமாறு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விபரங்களை சமர்ப்பிப்பதற்கான விண்ணப்பங்கள்இன்று முதல் ஏற்றுக்கொள்ளப்படுமெனவும்எனினும் 100 மீற்றருக்கு அப்பால் வீடுகளை அமைக்கவுள்ளவருக்கே இந்த உதவு தொகை வழங்கப்படுமெனவும் அரசாங்கம்தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டமக்களுக்கான வீடுகளின் புனரமைப்புக்கான நிதிக் கொடுப்பனவை இலங்கைவங்கி மற்றும் மக்கள்வங்கி மூலம்வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் வாழும் குடும்பங்கள் தாம் 100 மீற்றருக்கு அப்பால் வசிப்பதனை உறுதிப்படுத்திக் கொடுப்பனவு படிவத்தினை இரண்டு வங்கிகளில் ஏதாவது தொன்றில் சமர்ப்பிக்க வேண்டும். இந்த விண்ணப்பங்கள் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள மாவட்ட செயலகங்கள் மற்றும் இரண்டு வங்கிகளின் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

அரசாங்கம்புள்ளி விபரத்தின் படி 20 ஆயிரம் வீடுகள் முழுமையாகச் சேதமடைந்தும் 10 ஆயிரம் இலிருந்து 15 ஆயிரம் வரையான வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. இந்த வீடுகளை மீள் கட்டுமானம் செய்வதற்கு 4பில்லியன் தேவையென அரசாங்கம் மதிப்பிட்டுள்ளது.

இந்தகட்டுமானத்திற்கான நிதி உலக வங்கியிடமிருந்து சுவிற்சர்லாந்து நாட்டிடமிருந்தும் பெறப்பட்டதாக நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

# பல்கலைக்கழக மோதல்கள் குறித்து உயர்கல்வி அமைச்சு கவனம்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் மோதல்கள் குறித்து கவனம் செலுத்தி வருவதாக உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

துணைவேந்தர்கள், மாணவத் தலைவர்கள் ஆகியோரை அடிக்கடி சந்தித்து, வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் மாலினி பீரிஸ் தெரிவித்தார்.

பகிடிவதை சம்பவங்கள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளது.

இரண்டு மாணவ குழுக்களுக்கிடையிலான மோதல்களை அடுத்து வடமேல் பல்கலைக்கழகத்தின் குளியாப்பிட்டி வளாகத்திலும் கல்விச் செயற்பாடுகள் இடம்பெறுவதில்லை. இவற்றை மீண்டும் திறப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, மூடப்பட்டிருக்கும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தை மீண்டும் திறப்பதற்கான திகதி இதுவரை நிர்ணயிக்கப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# இராணுவத்திலிருந்து தப்பியோடியோர் நிரந்தரமாக விலக்கும்பணி விஸ்தரிப்பு

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கும் நடவடிக்கை விஸ்தரிக்கப்பட்டு, படையிலிருந்து தப்பியோடியவர்களை நிரந்தரமாகப் பணிகளில் இருந்து நீக்கி விடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் மே மாதம் 6 ஆம் திகதி வரை மாவட்ட செயலகங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவை அங்கு பிரசுரிக்கப்படும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்னாயக்க தெரிவித்தார்.

ஏற்கனவே கொழும்பு, குருநாகல் மற்றும் அனுராதபுரம் ஆகிய இடங்களில் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, விரும்பிய படைவீரர்கள் பணிகளிலிருந்து விலக்கிவிடப்பட்டனர்.

இதேவேளை, தற்சமயம் எடுக்கப்பட்டுள்ள முனைப்பின்படி - 2003 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி வரை படையிலிருந்து தப்பியவர்களுக்குச் சட்டபூர்வ பணிநிறுத்த அங்கீகாரம் வழங்கப்படவுள்ளது.

படையிலிருந்து சுமார் 50 ஆயிரம் பேர் தப்பிச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் பெரும்பாலானோர் குற்றச்செயல்களில் ஈடுபட்டு வருவதாகத் தமக்கு தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வீடமைப்பு திட்டத்துக்கு சுவிற்சர்லாந்து உதவி

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வீடுகளை அமைத்துக்கொடுக்கும் அரசாங்கத்தின் திட்டத்துக்கு - நிதியுதவி வழங்க சுவிற்சர்லாந்து அரசாங்கம் முன்வந்துள்ளது.

இந்தத் திட்டத்துக்காக 700 மில்லியன் ரூபாவை வழங்க சுவிற்சர்லாந்து அரசாங்கம் இணங்கியுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிதி மூலம் திருமலை மற்றும் மாத்தறை மாவட்டங்களில் புதிய வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு டென்மார்க் அரசாங்கம் நிதியுதவியை வழங்கவுள்ளது.

இந்த இரண்டு நாடுகளதும் நிதியுதவி வழங்குவதான உடன்படிக்கைகள் - நிதி திட்டமிடல் அமைச்சில் அண்மையில் கைச்சாத்திடப்பட்டதாகவும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

## வெலிக்கடை சிறையிலிருந்து

# கைதிகள் தப்பிச்செல்ல எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டது

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் குழுவொன்றால் தயாரிக்கப்பட்ட கதவுப் பூட்டுக்கான திறப்பின் உதவியுடன், சிறைக்கதவைத் திறந்து கடந்த புதன்கிழமையன்று கைதிகள் தப்பிச் செல்ல எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைதிகளின் இந்தத் திட்டம் குறித்த தகவலைத் தாம் ஏற்கனவே பெற்றதனாலேயே இதை முறியடிக்க முடிந்ததாகச் சிறைச்சாலை ஆணை யாளர் தெரிவித்தார்.

இது குறித்த விபரம் வெளியான பின்னர், சிறைச்சாலை ஆணையாளரின் உத்தரவுக்கிணங்க சிறைச்சாலை அதிகாரிகள்குழு - சிறைச்சாலை அறையைச் சோதனையிட்டபோதே அங்கு ஒளித்து வைக்கப்பட்டிருந்த அந்தத் திறப்பு கண்டுபிடிக்கப்பட்டது.

திறப்பு ஒளித்து வைக்கப்பட்டிருந்த சிறைச்சாலை அறையில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட 100 வரையான சிறைக்கைதிகள் தங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தையடுத்து அங்குள்ள கைதிகள் அனைவரும் வேறு சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்தது.

(தே)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் சில செயற்திட்டங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று - யாழ். செயலகத்தில் அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் பிரதேச செயலக அதிகாரிகள், உள்ளூராட்சி சபை அதிகாரிகள், தொழிநுட்ப உதவியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இங்கு உலக உணவுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் சில செயற்திட்டங்களை நிலங்களின் தன்மைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கும் சில முன்மொழிவுகள் வழங்கப்பட்டன.

# அமெரிக்கா செல்வோருக்கான விசா காலம் 5 வருடமாக நீடிப்பு

(கொழும்பு)


அமெரிக்கா செல்லும் இலங்கையர்களுக்கு வழங்கப்பட்டு வந்த விசா அனுமதிக் காலத்தை - அமெரிக்கத் தூதரகம் 5 வருடமாக அதிகரித்திருப்பதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாகப் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சட்டம் சமாதானத்துக்கான அமைச்சு மற்றும் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர்கள் ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வியாபார மற்றும் தனிப்பட்ட தேவைகளுக்காக அமெரிக்கா செல்லும் இலங்கையர்களுக்கு இதுவரை வழங்கப்பட்ட ஒரு வருட விசாகாலம் தற்பொழுது 5 வருடங்களாக அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும், கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைக்கு வரும் அமெரிக்கப் பிரஜைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கையெடுக்க விருப்பதாக, குடிவரவுத் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

# நேப்பியர் டெஸ்ட் போட்டி சமனிலையில் முடிவுற்றது!



(நேப்பியர்)

இலங்கை-நியூஸிலாந்து அணிகளுக்கிடையே நேப்பியரில் நடைபெற்றுவந்த முதல் டெஸ்ட் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவுற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 561 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தபின்னர் இலங்கை அணி துடுப்பெடுத்தாடி 498 ஓட்டங்களை எடுத்தது.

இதையடுத்து நியூஸிலாந்து அணி இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடியது. நான்காம்நாள் ஆட்டநேரமுடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 64 ஓட்டங்களைப் பெற்றிருந்த நியூஸிலாந்து அணி நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடியது.


நேற்றைய ஆட்டம் தொடங்கியதுமே நியூஸிலாந்து அணிக்கு மாலிங்கவின் பந்துவீச்சு பெரும் நெருக்கடியாக அமைந்தது.

ஆட்டம் தொடங்கிய சற்று நேரத்துக்குள்ளாகவே - ஸ்கோர் 69ஐ எட்டியபோது மூன்றாவது விக்கெட்டாக வைஸ்மன் வீழ்த்தப்பட்டார். இவர் ஓட்டமெதையும் எடுக்கவில்லை.

இதன்பின்னர் களமிறங்கிய பிளெமிங், வின்சென்ற், மில்ஸ் தவிர்ந்த ஏனைய வீரர்கள் எவருமே சரியாக ஆடவில்லை. இதனால் நியூஸிலாந்து அணி 238 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்து ஆட்டமிழந்தது.

பிளெமிங் -41, அஸ்ரில் -19, வின்சென்ற் -52, மக்கலம் -7, பிராங்ளின் -7, மில்ஸ் -22 ஓட்டங்களை எடுத்தனர். மாட்டின் ஆட்டமிழக்காமல் 4 ஓட்டங்களை எடுத்தார்.

மாலிங்க 5 விக்கெட்டுக்களையும், ஜயசூரிய 2 விக்கெட்டுக்களையும், சந்தன மற்றும் ஹேரத் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.




இதையடுத்து இலங்கை அணி பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது. அத்தப்பத்து 2 ஓட்டங்கள், ஜெயசூரிய 5 ஓட்டங்களென 7 ஓட்டங்களை இலங்கை அணி எடுத்திருந்தநிலையில் போதிய வெளிச்சமின்மையால் ஆட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

இதனால் இந்தப் போட்டி சமனிலையில் முடிவுற்றது.

## விளையாட்டு

# உலகக்கிண்ண மகளிர் கிரிக்கெட் இந்திய - அவுஸ்ரேலிய அணிகள் இறுதிப் போட்டியில் மோதவுள்ளன!



உலகக் கிண்ண கிரிக்கெட் அரையிறுதிப் போட்டியில் இந்திய அணி 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூஸிலாந்தை வீழ்த்தி முதல்முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

உலகக்கிண்ண மகளிர் கிரிக்கெட் போட்டி தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவருகிறது.

இதில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 2ஆவது அரையிறுதி ஆட்டத்தில் இந்திய அணி, கடந்தமுறை சம்பியனான நியூஸிலாந்தை எதிர்கொண்டது.

முதலில் ஆடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 204 ஓட்டங்களைக் குவித்தது. மிதாலிராஜ் ஆட்டமிழக்காமல் 104 பந்துகளில் 9 பவுண்டரிகளுடன் 91 ஓட்டங்களை எடுத்தார். அஞ்சும் சோப்ரா 44 ஓட்டங்கள் எடுத்தார். நியூஸிலாந்து தரப்பில் புல்லர் 4 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

பின்னர் ஆடிய நியூஸிலாந்து அணி, இந்திய வீராங்கனைகளின் சிறப்பான பந்துவீச்சுக்குத் தாக்குப்பிடிக்கமுடியாமல் 164 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதனால் இந்திய அணி 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது. இதன்மூலம் இந்தியா முதல்முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

நியூஸிலாந்து அணியின் தரப்பில் டாஜெய் ஆட்டமிழக்கால் 73 ஓட்டங்களை எடுத்தார். இந்திய பந்துவீச்சாளர்கள் அஞ்சும் சர்மா, அல்காதரிகான் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், நீது டேவிட் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

இறுதிப் போட்டி நாளை நடைபெறவுள்ளது.



இதில் இந்திய-அவுஸ்ரேலிய அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

# கிரிக்கெட் சுற்றுப்போட்டி

பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடத்தப்படும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான 30 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் இன்று காலை ஆரம்பமாகவுள்ளன.

இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் கழக அணி மோதவுள்ளது.

பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ள இன்னொரு ஆட்டத்தில் பல்கலைக்கழக அணியை எதிர்த்து பற்றீசியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

# மூன்றாவது ஒருநாள் போட்டி இன்று பாகிஸ்தான் அணியில் மாற்றங்கள்!





ஜம்ஷெட்பூரில் இந்தியாவுடன் இன்று நடைபெறவுள்ள மூன்றாவது ஒருநாள் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் அதிரடி மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற போட்டியில் இன்சமாம் முறைதவறி நடந்தமை குறித்து விசாரணை செய்யப்பட்டது. விசாரணையின் பின்னர் இன்சமாம் நிருபர்களிடம் கூறுகையில் - யுனுஸ்கான் அணிக்குத் திரும்பியது பலத்தை அதிகப்படுத்துமென்றும், அப்ரிடி தொடர்ந்து தொடக்க வீரராக ஆடுவார் என்றும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் முதல் இரு போட்டிகளில் தோல்வியடைந்தாலும் நம்பிக்கையிழக்கவில்லை. அடுத்த போட்டியில் இந்தியா வெற்றிபெற்றால் பாகிஸ்தான் அணிக்கு அதிகப்படியான சவால் ஏற்படும்.

இதன் காரணமாக நடைபெறவுள்ள போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் அதிரடியாக சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. முதல் 2 மோதல்களிலும் சரியாக ஆடாத வேகப்பந்து வீச்சாளர் சமி, சுழற்பந்து வீச்சாளர் அர்ஷத்கான் மற்றும் சகலதுறை ஆட்டக்காரர் ஹபீஸ் ஆகியோர் அணியிலிருந்து நீக்கப்படவுள்ளனர். இவர்களுக்குப் பதிலாக இப்திகார் அஞ்சும், கனேரியா மற்றும் யுனுஸ்கான் ஆகியோர் இடம்பிடிக்கவுள்ளனர் எனத் தெரிவித்தார்.


சுபமான தருணத்தில்...

இன்று முதல்

யாழ்ப்பாணத்தில்

மக்கள் மனங்களை வென்ற
பீபல்ஸ் லீஸிங் கம்பனி
பரந்த விஸ்த்தரிக்கப்பட்ட கிளையாக
மீண்டும் உதயமாகிறது



PLC

பீபல்ஸ் லீஸிங் கம்பனி லிமிட்டெட்
மக்கள் வங்கிக்கு முழு உரித்துடைய நிறுவனம்
இல.82 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்

தலைமையகம்: 67, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 2. தொ.பேசி 2481000

(C/4023) கிளைகள் : கண்டி, இரத்தினபுரி, குருணாகலை, மாத்தறை, பதுளை, அநுராதபுரம், பொலன்னறுவை, காலி, நீர்கொழும்பு, அம்பலந்தோட்டை, களுத்தறை, திருகோணமலை.

GRACE

# மங்களபுர தூதுவரும் மகேந்திரபுர முதியவரும்






# துருவன் சிறுவர் அரங்கம்



## வண்ணத்துப் பூச்சி

வண்ண வண்ணப் பூச்சி
வண்ணத்துப் பூச்சி
தொட்டுப் பாரு கையில்
ஒட்டிக் கொள்ளும் உடனே.

மலர்கள் மேல் தாவும்
வந்து வந்து இருக்கும்
பூக்கள் மீது அமர்ந்து
காய்க்க வைக்கும் அதிசயம்.

முட்டை கூட்டுப் புழுவாய்
கூட்டிலிருந்து வளரும்
பூச்சியாகிப் பறக்கும்
புழுவாயிருந்த ஜந்து

வெள்ளை, கறுப்பு, மஞ்சள்
துள்ளி ஓடிப் பறக்கும்
பிள்ளை கூடப் பிடிக்கும்
பிடித்தால் சாகும் அறி நீ.

சிறகில் வர்ண ஜாலம்
புள்ளி, கோடு எல்லாம்
இறைவன் படைப்பின் அதியம்
எண்ணித் துதிப்பாய் இதனை.

சுதந்திரமாய்ப் பறக்கும்
சூழலுக்கோ அழகு
இயற்கை அளித்த செல்வம்
இதனை அழித்தல் துன்பம்.

அழகு கூடவே சுதந்திரம்
அதனை உவமிக்க கவிஞர்
வண்ணத்துப் பூச்சியைச் சொல்வர்
எண்ணத்தில் அதனைக் கொள்வாய்.

-ரூனா-

மௌனமாய் இருந்து அனைத்தையும் கேளுங்கள்.
கவனமாகவும், பொறுமையாகவும் இருங்கள்.
இதன் மூலம் அனைத்தையும் கற்றுக்கொண்டு வாழலாம்.

## ஓவியப்போட்டியில் ஆறுதல் பரிசு பெற்றவர்களின் பெயர்களும், ஓவியங்களும்.



வே.ராஜா
தரம் -10
யாழ்/ விக்னேஸ்வராக் கல்லூரி.




ந.ஜெயதாஸ்
தரம் -11
யாழ்/ வேலணை வைத்தியலிங்கம் துரைச்சுவாமி மத்திய மகா வித்தியாலயம்



த.சிந்துஜா
தரம் -10
யாழ்/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்

## உங்கள் கைவண்ணம்



சா.தனுஜா
தரம் -3
யாழ்/ ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்.

## இலங்கையின் முக்கிய வீதிகளும் இலக்கங்களும்

| | | |
|---|---|---|
| A1 SP | கொள்ளுப்பிட்டி | - ஜெயவர்த்தனபுரம் |
| A1 | கொழும்பு | - கண்டி |
| A2 | கொழும்பு | - வெள்ளவாயா |
| A3 | பேலியகொ.. | - புத்தளம் |
| A4 | கொழும்பு | - இரத்தினபுரி |
| A5 | செங்கலடி | - பேராதனை வீதி |
| A6 | அம்பேபுச | - திருகோணமலை வீதி |
| A7 | அவிசாவளை | - நுவரெலியா வீதி |
| A8 | பாணந்துறை | - இரத்தினபுரி வீதி |
| A9 | கண்டி | - யாழ்ப்பாணம் |
| A15 | மட்டக்களப்பு | - திருகோணமலை |

தி.தயானந்தன்
கொக்குவில்
இந்துக் கல்லூரி.

## உலகில் மிகப்பெரியவை

1. உலகில் மிகப்பெரிய சிலை - நியூயோர்க் சுதந்திரச்சிலை.
2. உலகில் மிகப்பெரிய வளைகுடா - மெக்சிக்கோ.
3. உலகில் மிகப்பெரிய உயரமான நீர்வீழ்ச்சி - ஏஞ்சல்.
4. உலகில் மிக அகலமான நீர்வீழ்ச்சி - கேனே நீர்வீழ்ச்சி.
5. உலகில் மிகப்பெரிய கோபுரம் எது - ஈபிள் கோபுரம்.
6. உலகில் மிகப்பெரிய பீடபூமி - திபெத்
7. உலகில் மிகப்பெரிய கடல் - தென்சீனக் கடல்

வை.வினிதா
தரம் - 9
யாழ். வைதீஸ்வர பெண்கள் உயர்தரப் பாடசாலை.



# சிங்கம் கண்டுபிடித்த நீரோடை



சிங்கம் ஒன்று காட்டில் நடந்துபோய்க்கொண்டிருந்தது. வழியில் தற்செயலாக அந்த நீரோடையைக் கண்டுபிடித்தது அந்தச் சிங்கம். பனித்துளிகள் போல் சில்லென்றிருந்த அந்தத் தண்ணீர் பருகவும் சுவையாயிருந்தது.

'காட்டுக்குள் எத்தனை இடத்தில் அலைந்து திரிகிறோம். இந்த நீரோடை எப்படிக் கண்ணில் படாமல் போனது!' என்று ஆச்சரியப்பட்டது சிங்கம்.

இதுபற்றி அந்தச் சிங்கம் பெரிய சிங்கங்களிடம் கூறியது. அப்போது மூத்த சிங்கம் ஒன்று, 'சகோதரனே! எங்கள் முப்பது ஆண்டுகால அனுபவத்தில் இப்படி ஒரு நீரோடையைப் பார்த்ததில்லை. உன் கண்ணில் அது பட்டிருக்கிறது என்றால் இதில் ஏதோ 'சூது' இருக்கிறது. இப்போதே வா, சந்தேகத்தைச் சரிசெய்து கொள்ளலாம்', என்றது.

கூட்டத்தில் இருந்த இன்னொரு சிங்கம், 'இப்போது இருட்டிவிட்டது. எனவே, நம்மால் எதுவும் கண்டுபிடிக்க முடியாது. காலையில் பார்த்துக்கொள்வோம்' என்றது.

முதலில் கதைத்த சிங்கத்துக்குக் கோபம் வந்துவிட்டது. 'நண்பர்களே! நாளை என்று நாளைத் தள்ளிப்போடுவதால் நாம் வாழ்க்கையின் முக்கியமான பகுதிகளை இழந்துவிடுகிறோம். தவிரவும், எப்போது சந்தேகம் என்று வந்துவிட்டதோ அப்போதே அதை நிவர்த்தி செய்யவேண்டும்', என்றது.

'நண்பர் பார்த்திருப்பது இதுவரை எம் கண்ணில் படாத புதிய நீரோடை. அதுவும் காட்டின் கடைசிப் பகுதியில் - அதாவது ஊரின் எல்லையை ஒட்டி இருப்பதாகத் தெரிகிறது. நாம் நான்குபேர் போய் இப்போதே பார்த்துவருவதுதான் நல்லது' என்றது இன்னொரு வயதான சிங்கம்.

அந்தச் சிங்கத்தின் சொல்லுக்கு மற்றச் சிங்கங்கள் கட்டுப்பட்டன. தங்கள் மறைவிடத்தை விட்டு வெளியேறி, புதிய நீரோடையைக் கண்டுபிடித்த சிங்கத்தையும் அழைத்துக்கொண்டு வந்தன.

புதிய நீரோடைப்பக்கம் அவை நெருங்கியபோது, அங்கே சிறிதாக வெளிச்சம் தெரிந் தது. கூடவே, மனி தக் குரல்கள் எழுந் தன. 'ஆஹா! இன்று சிங்கம் தண் ணீர் பருக வந்தி ருக்கிறது. இதோ அதன் காலடிச்சுவடு தெரிகிறது. ஆகவே ஒன்று இரண்டாகும், இரண்டு நான்காகும். இப்படிச் சிங்கங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது அவற்றைப் பிடிக்க வலை விரித்து விடுவோம்' என்றது ஒரு குரல்.

'அப்படியானால் நாம் செயற்கை நீரோடையை ஏற்படுத்தியது வீண்போகவில்லை என்று சொல்!' என்றது அடுத்த குரல்.

'உண்மைதான், நமது திட்டமிட்ட முயற்சி வீணாகவில்லை' என்றது மற்றொரு குரல்.

அங்கிருந்த மூவரும் தங்களை மறந்து சிரித்தார்கள். மறைவிடத்தில் இருந்து பார்த்துக்கொண்டிருந்த சிங்கங்கள் ஒன்றையொன்று பீதியுடன் பார்த்துக்கொண்டன.


'பார்த்தாயா, நான் சொன்னது உண்மையாகிவிட்டதல்லவா? மிக எளிதாக, ஒரு அற்புதமான வாய்ப்புக் கிடைக்கிறது என்றால் அதில் எச்சரிக்கையாக இருந்து கவனிக்கவேண்டும். நாளைக்கே காட்டிலுள்ள நமது மற்ற நண்பர்களை எச்சரிக்கவேண்டும்' என்றது அவர்களை அழைத்துவந்த சிங்கம்.

'நாம் இந்த மூவர் மீதும் பாயலாமா?' என அவசரப்பட்டது ஒரு சிங்கம். 'வேண்டாம்' என்று கோபப்பட்டது அனுபவம் வாய்ந்த இன்னொரு சிங்கம்.

'காட்டுக்குள் இந்த இரவு நேரத்தில் மூன்றுபேர் வந்திருக்கிறார்களென்றால் தனியாகவா வந்திருப்பார்கள்? அவர்கள் நிறுத்தியிருக்கும் வாகனத்தைப் பார். அதில் சாத்திவைக்கப்பட்டிருக்கும் துப்பாக்கிகள் உன் கண்ணில் படவில்லையா?' எனத் தொடர்ந்து கேட்டது.

அவசரப்பட்டுக் கேட்டதற்காக வெட்கித் தலைகுனிந்தது அந்தச் சிங்கம். பின்னர், எல்லாச் சிங்கங்களும் தமது மறைவிடம் நோக்கி மெதுவாக நடந்துபோயின.

# அப்பாவின் அறிவுரை



அன்று சங்கரின் வகுப்பில் 'கடிதம் எழுதுவது எப்படி' என்ற தோரணையில் அவனுடைய ஆசிரியர் படிப்பித்துக் கொண்டிருந்தார். கடிதம் எழுதும்போது எப்படி ஆரம்பிப்பது, விடயங்களை எப்படி விளங்கும்படி யாக எழுதுவது, எப்படி முடிப்பது என்பது பற்றிய தெளிவு மாணவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக அவருடைய கற்பித்தல் இருந்தது.

கற்பித்தல் முடிந்ததும் உதாரணமாக ஒரு கடிதம் எழுதிக் காட்டும்படி ஆசிரியர் சொல்ல, சங்கரும் ஒரு கடிதத்தை முறைப்படி எழுதிக் காண்பித்தான். ஆசிரிய ரின் பாராட்டு சங்கருக்கு கிடைத்தது. சங்கர் வீடு வந்ததும் தான் எழுதிய கடிதத்தை தனது தந்தையாருக்குக் காட்டினான். தந்தையாரும் தனது மகன் எழுதிய கடிதத்தை மிகவும் சுவையாக வாசித்து ரசித்தார். தானும் மகனுக்கு ஏதாவது உதவியாகச் சொல்லவேண்டுமே என விரும்பினார்.

அவருடைய கடந்தகால வாழ்க்கையில் ஏற்பட்ட சம்பவம் ஒன்று ஞாபகம் வரவே, அதனை மையப்படுத்தி இப்படிச் சொல்லத் தொடங்கினார் அவர்.

''கடிதங்களை எழுதுவதோடு மட்டும் அது நிறைவுபெறாது. அதை உரிய முறையில் உரியவருக்கு அனுப்பி வைப்பதில் கவனம் செலுத்தவேண்டும். எழுதிய கடிதத்தை அனுப்பும் உறைக்கு ஏற்ற அளவில் பக்குவமாக மடித்து அதை உறையில் இடவேண்டும். உறையின் விளிம்புகளை ஒட்டும்போது, ஓரங்களுக்கு மாத்திரம் பசையைத் தடவிக்கொள்ளவேண்டும். அப்படியில்லாமல் அளவுக்கு அதிகமாக பசையைத் தடவி ஒட்டுவதால், கடிதத்தைப் பெறுபவர் கடிதத்தைப் பிரிக்கும்போது, கடிதம் கிழிந்துபோகக் கூடும். சிலவேளை கடிதத்தில் குறிப்பிடப்பட்ட மிக முக்கியமான குறிப்புகள் கிழிக்கப்பட்டுவிடும் சந்தர்ப்பத்தில், கடிதம் எழுதியதற்கான பலனே இழக்கப்பட்டுப் போவது போன்றதாகிவிடும். சிலவேளை கடிதம் மட்டுமல்ல, அதனுள் வைத்து அனுப்பப்படுகின்ற காசோலைகள்கூட பெறுமதியற்றதாகிப்போக வாய்ப்புண்டு'' என்று அப்பா சொன்னதும் சங்கருக்கு ஒரே வியப்பாக இருந்தது. அப்பா அழகாகச் சொல்கிறாரே! மேலும் பல புதிய விடயங்களைக் கற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கிறதே. நாளைக்கு ஆசிரியரிடம் இதைச் சொல்லவேண்டும் என்று சங்கர் நினைத்துக்கொண்டான். அப்பாவின் அனுபவப் படிப்பு சங்கரின் மூளையில் அழியாத இடத்தைப் பெற்றுக்கொண்டது.

- மாவன்னா

# மூளைக்கு வேலை

**1. விடுபட்ட எண் யாது?**

| 21 | 35 | 42 | 56 |
|---|---|---|---|
| 3 | 5 | 6 | ? |

## சென்றவார விடைகள்

1. இரண்டு ரூபா குற்றிகளில் நான்கும், ஐந்து ரூபா குற்றி ஒன்றும் சேர்த்தால், பதின்மூன்று ரூபா ஆகும். பலாப்பழம் வாங்கி உண்ணலாம.

2. ஒரு குருவிப் பொம்மையின் விலை $\frac{104}{13}$ = ரூபா 8

## ரமேஷும், சுரேஷும்

உங்கள் வீட்டில் எத்தனை ஆண் சகோதரர்கள், எத்தனை பெண் சகோதரர்கள் இருக்கிறார்கள் என்பதை நீ சொல்லாமலேயே என்னால் தெரிந்துகொள்ள முடியும் என்றான் சுரேஷ்.

எப்படி? என்றான் ரமேஷ்.

உங்கள் தாய் தந்தை 2 பேர் - ஆமாம்

அந்த இரண்டுடன் உங்கள் வீட்டில் உள்ள ஆண் சகோதரர்களைக் கூட்டிக் கொள்ளுங்கள். - சரி

அதை இரண்டால் பெருக்கிக்கொள்ளுங்கள். அந்தத் தொகையுடன் ஒன்றைச் சேர்த்துக் கொள்ளுங்கள். - சரி

அதனுடன் பெண் சகோதரிகளின் எண்ணிக்கையை கூட்டிக்கொள்ளுங்கள். அதைப் பத்தால் பெருக்கிக்கொள்ளுங்கள். இப்போது மொத்தம் எவ்வளவு? 170

உங்கள் வீட்டில் 5 ஆண் சகோதரர்களும், 2 பெண் சகோதரிகளும் இருக்கிறார்கள். சரிதானே.

## இலக்கத்துக்கேற்ற எழுத்தைத் தெரிந்து சொல்லைக் கண்டுபிடியுங்கள்

| தி | ரு | வா | ச | க | ம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |


1.மணத்தைக் குறிக்கும் .... 3, 4, 6
2.குழந்தை இதிலே உருவாகும் .... 5, 2
3.பாண்டவருக்கு நிகழ்ந்த சூழ்ச்சி .... 4, 1
4.பிரதிவாதியின் எதிர்ச்சொல் .... 3, 1
5. வேகத்தை அளக்கும் அலகு .... 5, 1
6. பராயம் எய்திய ஆண்களின் பெயர் முன் வருவது .... 1, 2
7. செய்யுளை இவ்வாறு சொல்லுவார்கள் .... 3, 4, 5, 6
8. இது ஒரு சுவாச நோய் .... 5, 4, 6
9. குதிரையின் மறு பெயர் .... 3, 5, 6

### விடைகள்

1.வாசம் 2. கரு 3. சதி 4. வாதி 5. கதி 6. திரு 7. வாசகம் 8. கசம் 9. வாகம்

வி.கோபிகா
தரம் - 4
யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்

# கறையான்



மிகத் திறமையும், சுறுசுறுப்புமுள்ளவை கறையான்கள். சில நாடுகளில் இவை நாற்பதடி உயரமுள்ள புற்றுக்களை எழுப்புகின்றன. கறையான்களுக்குப் பார்வையில்லை. பலவற்றிற்கு இறக்கைகளுமில்லை. இவ்வாறிருந்தும் அவை மிக விரைவில் தமது வேலைகளைச் செய்கின்றன.

கறையான்கள் தமது எச்சிலோடு மண்ணைச் சேர்த்துப் புற்றை எழுப்புகின்றன. இதனை இரும்புப் பாறை இல்லாமல் உடைக்க முடியாது. இந்தப் புற்றில் இலட்சக் கணக்கில் கறையான்களிருக்கும்.

எப்போதும் அவை நிலத்துள் புற்றைத் தோண்டித் தமத வீட்டை விசாலப்படுத்திக் கொண்டிருக்கும். கறையான்கள் மரப் பொருட்களை உண்டு அழித்து விடுவதால், மக்கள் அவற்றை விரும்புவதில்லை.

இறக்கை முளைத்துப் பறக்கும்கறையான்கள் ஈசல் எனப்படும். சில நாடுகளில் மக்கள் கறையான்களை உணவாகக் கொள்கின்றனர்.

தென் ஆபிரிக்காவில் கறையான் புற்றுக்கள் சாதாரணமானவை. அவற்றுள் பல 25 அடி உயரமானவை. மத்திய ஆபிரிக்காவில் 40 அடி உயரமுள்ள கறையான் புற்று ஒன்று காணப்படுகிறது.

தி. சரண்யா
தரம் - 05
கொற்றாவத்தை எ.எம் டி. எம் பாடசாலை.

# விடுகதைகளும் விடைகளும்

1. வெள்ளை பாம்பு காலைத்தூக்குது, அது என்ன?
2. வேட்டை ஆடுவான், தின்ன மாட்டான் அவன் யார்?
3. குத்தாத உலக்கை, என்ன உலக்கை?
4. தலையைச் சீவினால் தாளிலே நடப்பான், அவன் யார்?
5. உயிரில்லாத நீதிபதி ஒழுங்காக தீர்ப்பளிப்பான் அவன் யார்?
6. நெருப்பிலிட்டாலும் திடமாக இருப்பான் அவன் யார்?

### விடைகள்

1. புடலங்காய் 2. துப்பாக்கி 3. அச்சுலக்கை 4. பென்சில் 5. தராசு 6. செங்கல்

க. ஆனந்
தரம் - 7
சென்ஜோன்ஸ் கல்லூரி.



## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................

.................. ..................
திகதி ஒப்பம்

.................. ..................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## இரு படங்களும் ஒரே மாதிரி இருக்கின்றதல்லவா? மீண்டும் உற்றுப் பாருங்கள் ஐந்து வித்தியாசங்கள் தெரிகிறதா? அவற்றுக்கு வட்டமிடுங்கள்





# புலவரும் நவரத்தினங்களும்

புலவர் வாமதேவன் கவிபாடுவதில் திறமை பெற்றிருந்தார். பல நாட்டு மன்னர்களைப் புகழ்ந்து பாடி வைடூரியம், முத்து, பவளமென விலைமதிப்பு மிக்க பொருட்களைப் பரிசாகப் பெற்றுக் கொள்வார்.



ஒருமுறை இவ்வாறு பெற்றுக் கொண்ட நவரத்தினங்களுடன் தனது நாட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். நீண்ட தூரம் நடந்து வந்ததால் களைப்புற்றிருந்த புலவர் அன்றிரவை ஒரு சத்திரத்தில் கழிக்க நினைத்தார். தங்கி ஓய்வெடுத்துக் கொண்டு காலை விடிந்ததும் புறப்படலாம் என்று எண்ணி ஒரு சத்திரத்துக்குள் போனார்.

சத்திரத்தின் காவலாளி புலவரை வரவேற்று உணவு கொடுத்து உபசரித்தான். உணவு உண்டபின் புலவர் உறங்கச் சென்றார். அந்தச் சத்திரத்தில் அவருடன் மேலும் பலர் வந்து தங்கி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் திருடன். அவன் புலவரைப்பற்றி நன்கு அறிந்தவன். நிச்சயம் புலவரிடம் விலை மதிப்பில்லாத பொருட்கள் இருக்கும். அதை எப்படியும் அபகரித்துக் கொண்டு விடலாம் என முடிவு செய்தான்.

இரவு படுக்கும்போது, புலவருக்குச் சற்றுத் தள்ளி தன் உடமை அடங்கிய மூட்டையை வைத்தான். பின்னர் புலவரைப் பார்த்து 'ஐயா! இந்த மூட்டையைப் பார்த்துக்கொள்ளுங்கள். நான் கிணற்றடிக்குச் சென்று வருகிறேன்' எனக் கூறினான். புலவர் அவனைப் பார்த்துப் புன்னகைத்து, தலையசைத்தார். போனவன் திரும்பி வந்து அவருக்குச் சற்றுத் தள்ளிப் படுத்துக்கொண்டான்.

விடியும் நேரம் புலவர் எழுந்து, சத்திரத்தின் பின்புறம் சென்றார். அதை எதிர்பார்த்துக் காத்திருந்த திருடன் மெல்ல எழுந்து புலவரின் மூட்டையை அவிழ்த்துப் பார்த்தான். அதில் சாப்பிட ஒரு பாத்திரமும் உடுக்கச் சில உடைகள் மட்டுமே இருந்தன. அவன் எதிர்பார்த்த விலை மதிப்பில்லாத எந்தப் பொருளும் இல்லை.

திருடன் ஆச்சரியப்பட்டுப் போனான். ஏனென்றால் புலவர் பரிசு வாங்கி அந்த மூட்டைக்குள் வைத்துக்கொண்டு வந்ததை நண்பன் மூலம் அறிந்துதான் அதைத் திருடப் பின்தொடர்ந்து வந்தான்.

புலவர் திரும்பி வந்தார். சத்திரத்தில் தங்கியிருந்த மற்றப் பயணிகளும் எழுந்து பயணத்துக்குத் தயாராகிக் கொண்டிருந்தனர்.

திருடன் ஆச்சரியமுற்று புலவரைக் கேட்டே விட்டான். "ஐயா! நான் ஒரு திருடன் உங்களிடமிருக்கும் விலையுயர்ந்த நவரத்தினங்களைத் திருடவே வந்தேன். ஆனால் உங்கள் மூட்டையில் அவற்றைக் காணவில்லையே! எப்படி மறைந்தன?"

புலவர் புன்னகை மாறாமல்... "நீ திருடன் என்பதை உன்னைப் பார்த்தவுடனேயே புரிந்துகொண்டேன். எந்தத் திருடனும் மற்றவர் மூட்டைகளைத் தான் சோதித்துத் திருடுவான். தன் மூட்டைகளைச் சோதிக்க மாட்டான்.


அதனால்தான் இரவு நீ சத்திரத்தின் பின் பகுதிக்குப் போனபோது, என்னிடமிருந்த நவரத்தினங்களை உன் மூட்டைக்குள் வைத்துவிட்டேன்" என்றார்.

அவன் மூட்டையை அவிழ்த்து அந்த நவரத்தினங்களை எடுத்து மீண்டும் தன் மூட்டையில் வைத்துக்கொண்டு சத்திரத்தைவிட்டு நடக்க ஆரம்பித்தார் புலவர்.

திருடன் திறந்த வாய் மூடாமல் அவர் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

## நிழலைக் கண்டு பிடியுங்கள்




மாலை நேரம் சிறுவர்கள் விளையாடுகிறார்கள் எங்கே அவர்களின் நிழலை நீங்கள் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.




# சோதனைப் புதிர்

இங்கு 18 வார்த்தைகள் தரப்பட்டுள்ளன. இவை இந்தக் கட்டத்திற்குள் அடங்கவேண்டிய வார்த்தைகள். அவற்றை இடமிருந்து வலமாக, வலமிருந்து இடமாக, மேலிருந்து கீழாக, கீழிருந்து மேலாக நிரப்புங்கள். உங்கள் உதவிக்கு 'அதிகாலை' என்ற வார்த்தை மட்டும் கட்டத்திற்குள் தரப்பட்டுள்ளது

| | | |
|---|---|---|
| சரிகை | அதிபர் | எதிர்மாறு |
| செறிவு | அதிகாலை | உணவு |
| படையல் | கோபதாபம் | அம்புலி |
| காலம் | புதுயுகம் | நிலையாமை |
| புதைபொருள் | கூட்டுறவு | வாயு, உபசரி |
| வாங்கு | பொலிவு | கூழாங்கல் |
| அண்மை | அரம் | அணில் |






## குறியீடு

| | |
|---|---|
| ❖ வெள்ளைக் கொடி | - சமாதானம் |
| ❖ கறுப்புக் கொடி | - எதிர்ப்பு |
| ❖ சிவப்புக்கொடி | - புரட்சி |
| ❖ தலை கீழ் கொடி | - துன்பம் |
| ❖ அரைக்கம்பக் கொடி | - இரங்கல் |
| ❖ கையில் தராசுக் கொடி | - நீதி |

ஜெ.ஜெயக்கமலன்
தரம் - 07
மகாஜனாக் கல்லூரி.

## உங்களுக்குத் தெரியுமா?

### குன்றுகளின் உயரம்

| | |
|---|---|
| ✪ சிகிரியா | - 360 மீற்றர் |
| ✪ திம்புலாகல | - 534 மீற்றர் |
| ✪ யாப்பகூவ | - 240 மீற்றர் |
| ✪ றிதிகல | - 572 மீற்றர் |
| ✪ மிகிந்தலை | - 310 மீற்றர் |
| ✪ கதிர்காமம் | - 424 மீற்றர் |
| ✪ வத்தாகந்த | - 120 மீற்றர் |

### நீர் வீழ்ச்சிகளின் உயரம்

| | |
|---|---|
| ✪ லக்சபானா | - 114 மீற்றர் |
| ✪ தியலும | - 170 மீற்றர் |
| ✪ அபழன் | - 90 மீற்றர் |
| ✪ பம்பரகந்த | - 240 மீற்றர் |
| ✪ துன்கிந்த | - 58 மீற்றர் |

அ.துர்ஷன்
தரம் - 7
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*உறாஅ தவர்போல் சொலினும் செறாஅர்சொல்*
*ஒல்லை உணரப் படும்.*

*திருக்குறள்*

# நமது நோக்கு

## நோர்வேயின் புதிய முயற்சியும் ஜனாதிபதியின் வெறும் பேச்சும்...

சமாதானப் பேச்சுக்களுக்கு மீண்டும் அனுசரணையாளராகப் பணியாற்றவருமாறு நோர்வே அரசுக்கு ஜனாதிபதி சந்திரிகா விடுத்த அழைப்பினை எந்த முகூர்த்தத்தில் ஏற்றுக் கொண்டதோ தெரியவில்லை. புதிய அரசு ஆட்சியை ஆரம்பித்து இந்த ஓராண்டு காலத்துக்குள் நோர்வேயின் சமாதான ஏற்பாட்டாளர்கள் அலைந்த அலைச்சல் கொஞ்ச நஞ்சமல்ல.

கொழும்புக்கும் வன்னிக்கும் மீண்டும் கொழும்புக்கும், அதனையடுத்து புதுடெல்கிக்கும் அங்கிருந்து ஒஸ்லோவுக்கும் இன்னும் ஏதேதோ நாடுகளுக்குமென நோர்வே குழுவினர் அலைந்தலைந்து திரிந்தபோதும் சமாதான முயற்சிகளில் எள்ளளவு முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பதுதான் மனதை நெருடும்விடயமாகும்.

இதற்கு ஒரேயொரு காரணம் இலங்கையின் அரச அதிகார பீடத்தவர்களின் சமாதான முயற்சிகள் தொடர்பான செயற்பாடுகளில் இருந்த உறுதியின்மையும், விசுவாசமின்மையுமேயாகும்.

இலங்கையின் ஆட்சி அதிகார பீடத்தை அலங்கரித்தவர்களும், தற்போது அலங்கரிப்பவர்களும் போர்முன்னெடுப்புகளில் காட்டிய ஆர்வத்தையும், தீவிரத்தையும் எந்தக் காலகட்டத்திலும் சமாதான முயற்சிகளில் காட்டியதே கிடையாது. போரில் பின்னடைவுகளும், தோல்விகளும் தொடர்நிகழ்வுகளாக ஏற்படும் கட்டத்திலும், படையினரின் மனோபலம் குன்றியவேளைகளிலும், பொருளாதார ரீதியில் நெருக்கடிகளும் - சமாதானத்தை முன்னெடுக்கவேண்டுமென்ற சர்வதேச சமூகத்தின் அழுத்தங்கள் அதிகரிக்கும்போதுதான் இலங்கையில் ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் சமாதானம் என்ற சொல்லை உரத்து உரைக்க ஆரம்பிப்பார்கள் என்பது தெரிந்த விடயமேயாகும்.

உரத்து வெளிவரும் சமாதானம் குறித்த குரல் சிங்கள ஆட்சியாளரின் உள்ளத்திலிருந்து ஒருபோதும் வெளிவந்தது கிடையாது.

தமிழர் தரப்பு சமாதானம் தொடர்பான செயற்பாடுகளில் தமது நிலைப்பாடடை எப்போதுமே வெளிப்படையாகவும் அரச தரப்பினர்முன் இதுகாலவரையிலும் முன்வைத்தபோதும், சிங்கள பொத்த பேரினவாத ஆட்சித் தலைமைகள் அது குறித்து முன்னுக்குப்பின் முரணான கருத்து நிலைப்பாடுகளை முன்வைத்தே வந்துள்ளன.

எந்தக் காலத்திலும் இலங்கை அரசியலில், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கான எந்த முயற்சியின் போதும், அரசின் ஏமாற்றிக்காலம் கடத்தும் மூலோபாயமே அதன் பின்னடைவுக்கும் தோல்விக்கும் காரணமாகியுள்ளதைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் ஆட்சியாளர்கள் எத்தகைய உத்திகளைக் கையாண்டு சமாதானப் பேச்சுக்கள் முறிவடையக் காரணமாகினார்களோ, அதே உத்திகளை இன்னும் தொடர்வதுதான் வருத்தத்துக்குரிய விடயமாகும்.

இது தமிழ்பேசும் மக்களுக்கான அரசியல் மற்றும் வாழ்வுரிமைகள் எதனையும் சிங்களத் தலைமைகள் எந்தக் காலத்திலும் சமாதானப் பேச்சுக்கள் மூலம் வழங்கப் போவது கிடையாது என்பதை நிருபிக்கப்போதுமானதாகும்.

எனினும், சர்வதேச சமூகம் இதனைப் புரிந்துகொண்டு சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதாகத் தெரியவில்லை.

ஏற்கனவே இடைக்கால நிர்வாக அதிகாரசபை தொடர்பாக பல மாதங்கள் பேசியும் எவ்விதமான ஆக்கபூர்வமான - நம்பிக்கை தரும் முடிவெதனையும் அரசிடமிருந்து பெறமுடியாத நிலையில், தமது முயற்சியில் ஏமாற்றமும் நம்பிக்கையீனமும் மனதளவில் கொண்ட சூழலில், இப்போது பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் முயற்சியிலும் அலைந்தலைந்து களைத்துப்போன நோர்வே அனுசரணையாளர்கள், மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதனூடாக பொதுக்கட்டமைப்பை உருவாக்கத் திட்டம் ஒன்றை வகுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.


வேதாளத்தினை கீழே இழுத்தெடுக்கும் விக்கிரமாதித்தனின் முயற்சியாகவே நோர்வேயின் புதிய திட்டமும் இருக்கும் என்தில் ஐயமில்லை.

சமாதான முயற்சிகள் - விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் எந்தவடிவத்தில் மேற்கொள்ள நோர்வே முயன்றாலும் அதனை நிராகரிக்கவும், எதிர்க்கவும் தயாராக இருக்கும் ஜே.வி.பியினர் மற்றும் சிகல உறுமய பிக்குகள் ஆகியோரைப் பகைத்துக்கொண்டு, ஜனாதிபதி ஒரு தீர்க்கமான முடிவுக்கு வருதற்கான சாத்தியம் இல்லையென்றே கூறவேண்டும். சமாதானப் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்காவிடின் அனைத்தும் பாழாகிவிடும் என்று கூறும் ஜனாதிபதி, இந்த உண்மை நிலையை உணராதவர்களே இன்று அரசியலில் ஈடுபட்டுள்ளார்கள் என்றும் தெரிவித்துள்ளதுடன் - நோர்வேயை விரட்டிவிட்டே பேச்சுக்களை மேற்கொள்ளவேண்டும் என்று முட்டாள்தனமாக நினைக்கக்கூடாது எனவும் உரையாற்றியுள்ளார். இந்தவகையில் அவர் யாரை முட்டாள் என்று குறிப்பிடுகின்றார் என்பதை சொல்லித் தெரியவேண்டிய அவசியமேயில்லை.

ஆனால், அத்தகைய முட்டாள்களின் மிரட்டலுக்கும், அச்சுறுத்தலுக்கும் அவர் வெளிப்படையாகப் பணிந்து போய்க் கொண்டு இந்த நாட்டில் சமாதானத்தை நிரந்தரமாக்குவாரா என்பது சந்தேகமே...

இந்தநிலையில் நோர்வேயின் முயற்சிகளை இழுத்தடித்து காலத்தைப் போக்க நினைக்கும் உத்தியை ஜனாதிபதி முதலில் கைவிடாது, முட்டாள்கள் என அவரால் வர்ணிக்கப்படுபவரை புறந்தள்ளாது, சமாதானம் குறித்து அவர் பேசுவது உலகை ஏமாற்றும் தந்திரோபாயமாகவே கணிக்கப்படும்.

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# சமாதானத் தீர்வு அவசியம் ஆனால் அவசரத்தைக் காணவில்லையே!

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுகாணப்படும் என்ற நம்பிக்கை உமக்கு இருக்கிறதா என்று கேட்டுக்கொண்டே வந்தார் பரமசிவம்.

என்ன இப்படியொரு சந்தேகம் இந்த நேரத்தில் உமக்கு ஏற்பட்டிருக்கிறது? என்றேன்.

ஊடகங்களில் வரும் செய்திகளும் தென்னிலங்கையில் அரசியல் தலைவர்கள் உதிர்க்கும் கருத்துக்களும் இங்கு இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையைத் தரவில்லை என்றார் பரமசிவம்.

என்ன இப்படிச் சொல்லுகிறீர்? அரசியல் கட்சிகள் எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாலும் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்கவேண்டியது அவசியம். நாட்டின் அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு பேச்சுக்களை ஆரம்பிக்காவிட்டால், அனைத்துமே கெட்டுவிடும் என்று இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னர்தான் ஜனாதிபதி சந்திரிகா பொது வைபவத்தில் பேசுகையில் கூறியிருக்கிறார் என்று நான் சொன்னேன்.

விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டிய அவசியத்தையும், அவசரத்தையும் அவரது பேச்சு உணர்த்துவதாகத்தானிருக்கிறது. ஆனால் பேசுகின்ற அளவுக்கு அம்மையார் செயற்படுவாரா என்பது சந்தேகமாகவேயுள்ளது. முன்பொரு தடவை தலைவர் பிரபாகரனை இந்திய விடுதலைப் போராட்டவீரன் பகத்சிங்குடன் ஒப்பிட்டுப் பேசியவர்தான் இந்த அம்மையார். அதன்பிறகு என்ன பேசினார், என்ன செய்தார் என்பது நாடறியும். விடுதலைப் புலிகளுடன் பேவேண்டிய அவசியத்தையும், அவசரத்தையும் அம்மையார் எடுத்துக் காட்டிப் பேசிய அதேசமயம் அம்மையாரின் நம்பிக்கைக்குரிய அமைச்சர் கதிர்காமர் சொல்லியிருப்பதையும் பார்க்கவேண்டும். 'இனப் பிரச்சினைத் தீர்வு - பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் போன்ற எந்தப் பிரச்சினையென்றாலும் விடுதலைப் புலிகளை அணுகவேண்டியுள்ளது. இதற்கு ஜே.வி.பி. ஆதரவு தந்தாலும், நாட்டு மக்களும் சர்வதேச சமுகமும் இடமளிக்கமாட்டா' என்று கதிர்காமர் கூறியிருக்கிறார் என்றார் பரமசிவம்.

நாட்டு மக்களினதும், சர்வதேச சமுகத்தினதும் கருத்தைக் கதிர்காமர் எந்த அளவுகோல் கொண்டு அறிந்து சொல்கிறார் என்று தெரியவில்லை. சர்வதேச சமுகம் இன்றுவரை இலங்கையின் இனப்பிரச்சினை சம்பந்தமாக இலங்கை அரசுக்குச் சரியான அழுத்தம் கொடுக்கவில்லையென்பது மட்டும் உண்மை. இதனால் இலங்கையின் இனமுரண்பாட்டைத் தீர்ப்பதற்கு அரசியல் தீர்வு தவிர்ந்த ஏனைய வழிமுறைகளையே சிங்கள ஆதிக்க சக்திகள் நாட்டம் காட்டிவருகின்றன என்றார் பரமசிவம்.

தமிழ்மக்களைப் பலவீனப்படுத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தவேண்டும். இதற்கு என்னென்ன வழிகளைக் கையாள்வது என்பது பற்றியே சிங்கள பௌத்த மேலாண்மைவாத சக்திகள் சிந்தித்துத் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றன. இதற்கு நம்மவர்கள் இங்குள்ளோர் சிலரும் புலம்பெயர்ந்து வாழ்வோர் சிலரும் தெரிந்தும் தெரியாமலும் அற்பபயன் கருதியும் பகடைக்காய்களாகப் பயன்பட்டுவருகின்றனர் என்றேன் நான்.

உண்மைதான். நாடு நாடாகச் சென்று விடுதலைப் புலிகள் மிகப்பெரிய பயங்கரவாதிகள் என்று பிரசாரம் செய்தார் கதிர்காமர். உலக நாடுகள் அதைத்தடை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். சில நாடுகள் இதற்குச் செவிசாய்த்தன. இந்தியாவில் சுப்பிரமணியம் சுவாமியையும் கதிர்காமர் உதவிக்குச் சேர்த்துக்கொண்டார். உலகப் பயங்கரவாதிகள் புலிக்கு உதவியென்று அவர் சொன்னார். பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஆயுதங்கள் அனுப்புகின்றன என்றார். கொழும்பிலுள்ள சில ஊடகங்கள் விடுதலைப் புலிகளுக்கும் பின் லேடனுக்கும் தொடர்பு என்றும் பிரசாரம் செய்தன. அமெரிக்காவைக் கொண்டு புலிகளை அழிக்கவும் திட்டமிட்டன. போர்நிறுத்தம் இவற்றைப் பொய்யாக்கின என்றார் பரமசிவம்.

இப்பொழுது சிறுவர் கடத்தல் என்று பிரசாரம். தினமும் கொழும்பிலிருந்து வெளியாகும் ஊடகங்களில் விடுதலைப் புலிகளைக் கடத்தல்காரர்களாகவும், கொலைகாரர்களாகவும் சித்திரிக்கும் செய்திகளும் கேலிச் சித்திரங்களும் கட்டுரைகளும், ஆசிரியர் கடிதங்களும், ஆசிரியர் தலையங்களும்மே பெரும்பாலான இடங்களைப் பிடித்துக்கொள்கின்றன. போதாக்குறைக்கு விடுதலைப் புலிகள் கொலைகாரர்களென்றும் அவர்களின் நிர்வாகப் பகுதியில் ஜனநாயக சுதந்திரமில்லை, கொடுங்கோல்தான் நடக்கிறது என்றும் சங்கரியார் கடிதமாக எழுதி அறிக்கைகளாக உருவெடுத்து சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளில் சங்கரியாரின் பெரிய புகைப்படத்துடன் கட்டுரைகளாக இடம்பெறுகின்றன. இத்துடன் அவரைப் பெரியாராக்கி ஆசிரிய தலையங்கங்கள் இடம்பெறுகின்றன. சங்கரியாரை இனவெறிச் சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகள் பாராட்டுவதென்றால் அவர் எத்தனை தூரம் சகுனியாகச் செயற்படுகிறாரென்பதைப் புரிந்துகொள்ளலாம். இவர்கள்போல் இன்னும் சிலர் இப்படிச் செயற்படுகின்றனர். இதனால் தமிழீழ விடுதலைப் புலிகளையும் தமிழ் மக்களையும் பலவீனப்படுத்தி பழையபடி இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கே சிங்கள பௌத்த மேலாண்மை வாதிகள் திட்டமிட்டுச் செயற்படுகின்றனர் என்று மேலும் சொன்னார்.

சமாதானப்பேச்சு, பொதுக்கட்டமைப்பு என்று காலத்தைக் கடத்தி இதேசமயம் தமது படை பலத்தைப் பெருக்கி வெளிநாடுகளின் ஆதரவையும் தேடி அவசியமேற்பட்டால் வெளிநாட்டுப் படைகளின் உதவியைப் பெறவும் அரசும் ஆதிக்க சக்திகளும் சகல முயற்சிகளையும் செய்துவருகின்றன. இதற்கு நம்மவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ அல்லது அற்பசலுகைகள், நலன்களுக்காகச் செயற்படுவது பெரும் துரதிஷ்டம் என்றேன்.

தமிழீழப் போராட்டம் வெற்றிபெறவேண்டும், பேச்சுவார்த்தை மூலம் தமிழர் தமது தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் சுதந்திரமாக வாழ வழிபிறக்கவேண்டும். போரில் தமிழர்களை வென்று அடக்கி ஒடுக்கலாமென நினைத்தால் நாட்டுக்கே பேரழிவேற்படும். இந்தப் போர்தான் இறுதிப்போர் என்பதை சங்கரிகளும் உணர்ந்துகொள்வது அவசியம். அவர் வெளிநாட்டுக்குத் தப்பியோடிவிடுவார் வழமைபோல. அவர் வழிகாட்டி அவரை நம்பிய ஐந்தாறுபேர்தான் பாவம் என்றார் பரமசிவம்.

சர்வதேச சமுகத்தின்மீதே நம்பிக்கை குறைந்துவருகிறது. அவைகள் தங்கள் நலனைத்தான் பார்க்கின்றன. இலங்கை அரசுக்கு அவை அழுத்தம் கொடுக்காதவரை இங்கு இனப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு என்பது காலம் கடத்தும் நடவடிக்கையாகவே இருக்குமென்பது தெரிந்ததே என்றேன்.

பரமசிவம் மௌனமாக எழுந்து நடந்தார்.

## வாசகர் நோக்கு...

# இந்த பஸ்சேவை யாருக்காக?

யாழ்ப்பாணத்திலிருந்து கனகன்புளியடி ஊடாக கொடிகாமம் செல்லும் பஸ்சேவை இந்தப் பகுதி பயணிகளை ஏமாற்றும் ஒரு கண்துடைப்பு சேவையென்றே சொல்லவேண்டும். ஏதோ 794 பஸ்சேவை நடத்தினோம் என்ற பெயருக்குத்தான் நடக்கிறதே தவிர உண்மையில் பிரயாணிகளின் நலன் கருதி இந்தப் பாதையில் சேவை நடைபெறுவதில்லை.

காலை 6.45 மணிக்கு கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும் இந்த பஸ் அதிக நாட்கள் வராமல் ஏமாற்றிவிடுகிறது. இதனால் இந்தப் பகுதி பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். அதுமட்டுமல்லாமல் பிற்பகல் சேவைகளில் கனகன்புளியடி ஊடாக மிருசுவில் செல்லும் பஸ் மற்றும் 5.00 மணிக்குக் கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பஸ்ஸும் நேரே மிருசுவிலுக்கு கனகன்புளியடி ஊடாக (794) சென்று மீண்டும் திரும்பும்போது 769 பாதையூடாகச் செல்கின்றது. கேட்டால் கனகன்புளியடி ஊடாக போகாது சாவகச்சேரி போகும் என்கிறார்கள். ஏன் இந்த குளறுபடி வேலைகள்?

ஆக ஏ9 பாதை வழியாக 769 பாதைக்கு மட்டும் பஸ் சேவை விட்டால் மட்டும் போதுமா ஏனைய பாதைகளையும் கவனியுங்கள். மக்களுக்காக சேவையை நடத்துங்கள்.

மட்டுவில் — வி. ஜெகதீஸ்வரி






புத்தாண்டை குதூகலமாக கொண்டாடுங்கள்!

உங்கள் அன்புக்குரியவர்களிடமிருந்து பணத்தை பெற்று இப்புத்தாண்டை மகிழ்ச்சிகரமாக கழியுங்கள்!

உலகின் எப்பகுதியிலும் வெஸ்டன் யூனியன் சேவை கிடைக்கும். இதன் மூலம் பாதுகாப்பாகவும் நம்பகமாகவும் இலகுவாகவும் பணத்தை பெறலாம். வெஸ்டன் யூனியன் மூலம் 114 செலான் வங்கி கிளைகளில் பணத்தை பெற முடியும்.

வெஸ்டன் யூனியன் மூலம் உலகின் எப்பகுதியிலிருந்தும் செலான் வங்கியில் பணத்தை பெறும் போது ஐடிடி தொலைபேசி அட்டை ஒன்று இலவசமாக கிடைக்கும். இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே.

WESTERN UNION
பணப் பரிமாற்றல்

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

தலைமை அலுவலகம் செலிங்கோ செலான் டவர்ஸ்
இல, 90, காலி வீதி, கொழும்பு 3.
தொ.பே: 2347777, 4701000 பக்ஸ்: 2421597.
ஈ.மெயில் : info@seylan.lk
ஹொட்லைன் : 2452666

HOLMES POLLARD & ASOTT

# 2000 ஆம் ஆண்டே பதவியிலிருந்து விலகுவதற்கு விரும்பிய பாப்பரசர்!

## அவரே தனது உயிலில் தெரிவிப்பு

(வத்திக்கான்)

5 ஆண்டுகளுக்கு முன் பதவி விலக விரும்பியதாக பாப்பரசர் தனது உயிலில் குறிப்பிட்டுள்ளார். கடந்த சனிக்கிழமை நித்திய இளைப்பாற்றை அடைந்த 2 ஆவது ஜோன் போலின் உடல் வத்திக்கான் நகரிலுள்ள புனித பீட்டர் தேவாலயத்தில் நேற்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

26 ஆண்டுகள் பாப்பரசராக இருந்த இவர் 1979 ஆம் ஆண்டு முதல் தனது எண்ணங்கள் மற்றும் விருப்பங்களை உயிலாக எழுதி வைத்துள்ளார். தனது தாய் மொழியான போலந்து மொழியிலேயே அவர் தனது உயிலை எழுதியுள்ளார்.

பாப்பரசரின் நித்திய இளைப்பாற்றுகைக்குப் பின் இத்தாலிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட அந்த உயிலின் விபரங்களை வத்திக்கான் நிர்வாகம் நேற்றுமுன்தினம் வெளியிட்டது.

பாப்பரசராக பதவி ஏற்ற பின் தனது வாழ்க்கையில் நடந்த சில முக்கிய சம்பவங்களை 2 ஆவது ஜோன்போல் தனது உயிலில் குறிப்பிட்டுள்ளார். பாப்பரசர் கடந்த 2000 ஆம் ஆண்டு உடல் நலக் குறைவால் பெரிதும் பாதிக்கப்பட்டார். உடல் நிலையைக் கருத்தில்கொண்டு பாப்பரசர் பதவியிலிருந்து விலகுவது குறித்து அப்போது தான் பரிசீலித்ததாகவும் உயிலில் எழுதியுள்ளார்.

1981 ஆம் ஆண்டு பாப்பரசரை சுட்டுக்கொல்ல முயற்சி நடந்தது. இதை தனது உயிலில் எழுதி இருக்கும் பாப்பரசர், தான் உயிர் பிழைத்தது அற்புதம் என்றும் - எவ்வளவு காலம் நான் மக்களுக்கு சேவை செய்யவேண்டுமோ அதுவரை கடவுள் எனக்கு உதவியாக இருப்பார் என்றுதான் நம்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஏதாவது சொத்துக்களை விட்டுச்சென்றால் அவற்றைப் பராமரிக்க வேண்டும் என்பதால் தான் எந்த சொத்துக்களையும் விட்டுச் செல்லவில்லை என்றும் தனது உயிலில் பாப்பரசர் எழுதியுள்ளார். தனிப்பட்ட முறையில் தான் எழுதிவைத்துள்ள குறிப்புக்கள் அடங்கிய காகிதங்களை எரித்து விட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். தனது இறுதிச் சடங்கை தனது சொந்த நாடான போலந்தில் நடத்துவது பற்றி பரிசீலிக்கவேண்டுமென்று முதலில் கருதியதாகவும், பின்னர் இதுபற்றி கர்தினால்களே முடிவுசெய்து கொள்ளட்டும் என்று விட்டுவிட்டதாகவும் உயிலில் எழுதியுள்ளார்.


தனது உயிலில் 2 நபர்களை பற்றி மட்டும் பாப்பரசர் குறிப்பிட்டுள்ளார். அவர்களில் ஒருவர் பாப்பரசரின் தனிச்செயலாளர் ஆர்ச்பிஷப் ஸ்தனிஸ்லா டிசிவிஸ். பல ஆண்டுகள் தன்னுடன் இருந்து சேவை செய்ததற்காக அவருக்கு மிகுந்த நன்றி தெரிவித்துள்ளார்.

மற்றொருவர் ரோம் நகர தலைமை மதபோதகர் எலியோடோப். கடந்த 1986 ஆம் ஆண்டு ரோமில் நடந்த கூட்டத்தில் பாப்பரசர் கலந்து கொண்டார். அப்போது எலியோடோப் அவரை வரவேற்று விருந்து அளித்து கௌரவித்தார். வத்திக்கான் நிர்வாகத்தை நவீனப்படுத்த தான் விரும்பியதையும் உயிலில் பாப்பரசர் குறிப்பிட்டுள்ளார்.

பாப்பரசரின் இறுதி நிகழ்விலிருந்து...







### தேசிய பயிற்சி பாசறை

யாழ்.மாவட்ட மக்கள் நலன்புரிக் கழகமும், படையணிகளும் வருடந்தோறும் நடத்தும் தேசிய பயிற்சிப் பாசறை நிகழ்வு இன்று புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் ஆரம்பமாகி செவ்வாய்க்கிழமைவரை நடைபெறவுள்ளது.

இந்தப் பாசறை நிகழ்வில் யாழ். மாவட்டத்தின் 55 பாடசாலைகளை சேர்ந்த 650 மாணவர்கள் பங்கேற்கவுள்ளனர். இந்தப் பயிற்சிப் பாசறையில் தலைமைத்துவம், சிகரங்கள் அமைத்தல், சமையல், உள்ளக வெளியக விளையாட்டுக்கள் உட்பட பல்வேறு பயிற்சிகள் இடம் பெறவுள்ளன.

இந்தப் பயிற்சி பாசறை நிகழ்வை யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஆரம்பித்து வைப்பார்.

### சேவைநலன் பாராட்டு

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர் சபாபதி கந்தசாமி - கல்விச்சேவையில் இருந்து ஓய்வு பெறுவதையிட்டு அவரது கல்விச் சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் தற்போதய அதிபர் ச.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் பா.விக்னேஸ்வரன், தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜீனா இருதயநாதன், சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தனபாலசிங்கம், இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர் என்.சிவசண்முகமூர்த்தி, கிராம அலுவலர் நித்தியானந்தன், பிரதி அதிபர் எஸ்.சிறிக்காந்தன் உட்பட பலர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்குவர்

### உதைபந்தாட்ட போட்டி

எல்லைப்படை மாவீரர்களின் ஞாபகார்த்தமாக - சுனாமி தாக்கத்தால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காக தமிழீழ விளையாட்டுத்துறை யாழ்.மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் வலிகாம உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய காலிறுதி ஆட்டத்தில் மாலை 4 மணிக்கு கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரணவாய் மத்திய விளையாட்டுக் கழகமும் - மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள இன்னொரு ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து இளவாலை யங் கென்றீசியன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

# யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்துக்கு மேலதிகமாகத் தெரிவானோர் விபரம்

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடத்துக்கு 2004/2005 ஆண்டு கல்வியாண்டில் முதலாம் ஆம் வருட கற்கைநெறிக்கு மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்டோர் (விசேட அனுமதி) பட்டியல் வெளிவந்துள்ளது.

இவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 23.04.05 கலைப்பீடத்தில் ஆரம்பமாகவுள்ளதால் மாணவர்களைப் பல்கலைக்கழகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது.

அனுமதி பெற்றோர் விபரம் வருமாறு:-

ஏ.ரி.தர்மராஜா (105, மானாவரி, கொச்சிக்கடை), எம்.என்.எவ். நஸ்ரினா (மாவத்தபலாங்கொட), ஏ.ஜே. எப்.ரிஸ்மியா (மாவத்தபலாங்கொட), எம்.எம்.சத்தார் மொகமட் சகீத் (பழைய பள்ளிவாசல் தெரு, நிக்கவீரெட்டிய), எம்.கே.எப்.சில்மியா (185-2, மடலசா கெகுகொல), கணேசன் கோகிலராணி (மகாயாய இலுப்பதெனிய, சிலாபம்), சதாசிவம் மகேந்திரன் (சிலாபம்), நூர்தீன் சினாஸ் (கல்ப்பிட்டிய), மொகமட் அமீன் அனீஷா (புரம்கல்பிட்டிய) -

ரசீது சர்பனா (கலாவேவ, விஜதபுர), ஏ.டபிள்யூ.எவ்.சர்மிளா (இல. 68சி மாத்தளை வீதி, அக்குரண), கோவிந்தசாமி திலீப்குமார் (டிவிஷன் பத்தன), சுப்பிரமணியம் உஷாநந்தினி (எஸ்ரேட் லோவர் டிவிஷன், நானுஓயா), எச்.சி.எப்.றொவ்சி (எச். றோட்.சாய்ந்தமருது -14), அலியார் உவைஸ் (சாய்ந்தமருது -09), வி.ஜீவராசா (துறைநீலாவணை), மொகமட் தம்பி பிர்னாஸ் (நற்பிட்டிமுனை- 01, கல்முனை) -

விஜயரட்ணம் நிஷாந்தி (கல்முனை), ஏ.ஆர்.எம்.றிம்சான் (அட்டாளைச்சேனை), ஆனந்தராஜா கவிதா, பேரின்பம் சந்திரநீதா (முறக்கொட்டாஞ்சேனை), நிரோசினி கிருஷ்ணன் (நுவரெலியா), சிவலிங்கம் கோசலவாணி (மங்கையக்கரசியார் இல்லம்), யோகராசா கமலினி (2 ஆம் குறுக்குத்தெரு, திருச்செந்தூர் வீதி), கதிர்காமப்போடி சுரேஸ் (கொக்கட்டிச்சோலை) -

சிசுபாலன் புவனேந்திரன் (கிரான் குளம் 7, மட்டக்களப்பு), ஆறுமுகம் பிரதீபன் (கிரான்குளம், மட்டக்களப்பு), மகாலிங்கம் குணலட்சுமி (கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு), வேல்முருகு சுரேஸ்குமார் (செட்டிபாளையம்), அழகையா தேவரூபன் (செட்டிபாளையம்), கமலநாதன் பவகரன் (பளுகாமம், போரதீவு), செல்வராஜா மதன் (களுதாவளை 01, களுவாஞ்சிக்குடி), வைரமுத்து, நிருபமா (களுதாவளை 01), சண்முகநாதன் ஜெயப்பிரதா (வீரையடி வீதி, தேற்றாத்தீவு), கருணாகரன் வவிகரன் (மட்டக்களப்பு) -

பொன்னுத்துரை பூலோகநாதன் (மண்டூர் மட்டக்களப்பு), கனகேந்திரம் சுதாகரன் (செட்டிபாளையம்), கிருபைராசன் மேனகா (களுவாஞ்சிக்குடி 30200), இரத்தினசிங்கம் புவனா (களுவாஞ்சிக்குடி 30200), தாமோதரம்பிள்ளை ரஜனி (களுவாஞ்சிக்குடி) அரசரத்தினம் மலர்விழி (கோவில்போரதீவு), தங்கையா மயூரதா (மட்டக்களப்பு) -

நேசதுரை ஜெயகாந்தன் (விவேகானந்தபுரம் வெல்லாவெளி), பேரின்பநாயகம் பவன் (05 ஆம் வட்டாரம், துறைநீலாவணை), நல்லதம்பி நளினி (7 ஆம் வட்டாரம், துறைநீலாவணை), தம்பிராசா பாலச்சந்திரன் (மட்டக்களப்பு), மயில்வாகனம் ரமேஷ் (கல்லாறு), கஜிதா கருணாநிதி (கற்குழி, வவுனியா), கே.கனகரட்ணேஸ்வரன் (குருமன்காடு, வவுனியா) -

சர்மிளா ரவீந்திரா (தெக்காவத்த, வவுனியா), அனுசூயா துரைராஜா (சிவகுருநாதர் லேன், பிறவுண் றோட்), ஜெகானந்தபிள்ளை ஜெகதீபன் (சாஸ்திரிகூழாங்குளம், வவுனியா), சிவரூபி மகேந்திரன் (வவுனியா), சாந்தகுமார் விஜீபா (குமுழமுனை, முள்ளியவளை), கே.ஆர்.சந்திரகாசன் (அச்சுவேலி தெற்கு), ஆர்.விமலேஸ்வரன் (ஆசிக்குளம், வவுனியா), தங்கையா கவிதா (மன்னார்), இயிலா மெறின் ஜெகநாதன் (மொனராகல), மகேந்திரராஜா சுகந்தி (வவுனியா) -

வனிதா சேனாதிராஜா (பூந்தோட்டம், வவுனியா), விஜயரட்ணம் விஜயரூபினி (பூந்தோட்டம், வவுனியா), ஜீவனா பரராஜசிங்கம் (தோணிக்கல், வவுனியா), ரவீந்திரன் சுதர்சன் (புதுக்குடியிருப்பு, மட்டக்களப்பு), தவராஜா சுரேஸ்குமார் (புதுக்குடியிருப்பு), மகாலிங்கம் தயானி (கிளிநொச்சி), பாக்கியதுரை மனோகரன் (மீசாலை மேற்கு), கனகசபை துஷாந்தி (கடற்கரை வீதி, ஈச்சமோட்டை), தனபாலன் காண்டீபன் (வட்டக்கச்சி, கிளிநொச்சி), சேவியப் ஜஷ்மினி கார்மிளா (அல்லைப்பிட்டி), காஞ்சனா செல்லத்துரை (1 ஆம் வட்டாரம், அனலைதீவு) -

சுகுமார் சதீஸ்காந்த் (மண்கும்பான், வேலணை), குகராஜன் மீரா (பிறவுண் றோட், யாழ்ப்பாணம்), மயூரி கந்தசாமி (நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்), சிந்துஜா தேவபாலன் (திருநெல்வேலி, யாழ்ப்பாணம்), தர்சிகா பாலசிங்கம் (கந்தர்மடம், யாழ்ப்பாணம்), சுரேனுகா சிவபாலன் (யாழ்ப்பாணம்), தனபாலன் சுதர்சன் (அராலி மத்தி, வட்டுக்கோட்டை), உதயகுமார் வதனராஜ் (கோண்டாவில்), அம்பாலிகா தம்பிப்பிள்ளை (மானிப்பாய் தெற்கு), யூலியட் எமில்டா மத்தியாஸ் (8 ஆம் வட்டாரம், நெடுந்தீவு) -

குணசிங்கம் கோபிநாத் (வேலணை வடக்கு), அமிர்தலிங்கம் லிங்கேசன் (வேலணை கிழக்கு), பழனிநாதன் சர்மிளா (2 ஆம் வட்டாரம், நயினாதீவு), பி.பிரதீபன் (மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி), குணசேகரன் திவ்யா (சாவகச்சேரி), தங்கராஜா தயாதேவி (மருதம்புலம் வீதி, மட்டுவில்) -

தம்பிராசா அஜந்தன் (கச்சாய் வீதி, கொடிகாமம்), செல்வராஜா சுபிதா (சாவகச்சேரி), ராசபாதம் குணசீலன் (மானிப்பாய் தெற்கு), சின்னத்துரை லதீபன் (சங்குவேலி தெற்கு, மானிப்பாய்), பொன்ராசா சிவராசசிவம் (சுழிபுரம்), ஏ.பத்மவிநோதினி (மூளாய் தெற்கு, சுழிபுரம்), சந்திரகுமரன் நிதர்சன் (மூத்ததம்பி லேன், மானிப்பாய்), வி.கிருஷ்ணகுமார் (மானிப்பாய்), ராஜேந்திரம் கஜேந்தினி (மடத்தடி, சண்டிலிப்பாய்) -

அருமைத்துரை அஜந்தன் (டச்சு வீதி, உடுவில், சுன்னாகம்), சிவசாமி சந்திரா (கந்தரோடை, சுன்னாகம்), முருகையா நிசாளினி (சுன்னாகம் தெற்கு), சின்னையா லோகேஸ்வரன் (கச்சர்வெளி, பளை), சர்மினி குமாரதாஸ் (கோண்டாவில்), எஸ்.சச்சிதானந்தன் (யாழ்ப்பாணம்), தவராஜா அனுசன் (டச்சுவீதி, சண்டிலிப்பாய்), கணேசமூர்த்தி சர்மினி (அளவெட்டி கிழக்கு) -

சண்முகநாதன் சிவரஞ்சன் (நாகம்மாள் கோவில் வீதி), செல்வராஜா சுரேஸ் (மல்லாகம்), ஈஸ்வரநாதன் மகிழேசன் (சிவபூதவராயர் கோவிலடி), பஞ்சநாதன் ராகுலன் (உடுவில்), எஸ்.தமயந்தி (அளவெட்டி) யோகராஜ் பகீரா (புத்தூர்) விஸ்வலிங்கம் கணேசன் (யாழ்ப்பாணம்), ஜிவனா சின்னத்துரை (அச்சுவேலி) -

மனோகரன் கார்த்திகன் (சாவகச்சேரி), கீர்த்திகா நமசிவாயம் (சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி), தம்பியப்பா ஜெயகோபி (கோப்பாய் தெற்கு), சிவஞானம் கோமளாதேவி (கோப்பாய் தெற்கு), கே.கார்த்தீபன் (வல்வெட்டித்துறை கிழக்கு), சங்கீதா கந்தசாமி (பொலிகண்டி மேற்கு, வல்வெட்டித்துறை) -

செல்வரத்தினம் சிவரஞ்சன் (எழுதுமட்டுவாள்), அருளானந்தம் அமல்ராஜ் (கரவெட்டி மேற்கு), பிரதீபா செல்வமனோகரன் (நெல்லியடி), ரி.சதாசிவக்குருக்கள் (கரணவாய் கிழக்கு), விஜிதா பாலசுந்தரம் (கரவெட்டி), சிவானந்தம் சிவதர்சினி (வல்வெட்டித்துறை), கந்ததாசன் ரமணன் (பருத்தித்துறை), அகல்யா நாகேஸ்வரன் (செம்பியன்பற்று) -

சந்திரவதனா பொன்னப்பு (பருத்தித்துறை) ராசரத்தினம் ஜானகி (தும்பளை), கலையரசி செல்வராஜா (பருத்தித்துறை), சின்னராஜா கோசலா (பருத்தித்துறை), சாந்தினி ஆனந்தராஜா (உடுத்துறை வடக்கு, தாளையடி), வெற்றிவேலு உஷா (பத்திரகாளி கோவில் வீதி), செல்வராஜா துஷாந்தினி (பருத்தித்துறை)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# உள்ளூராட்சி சபைகளுக்கு திடீர் தேர்தல் நடத்த முயற்சி

(கொழும்பு)

அடுத்த வருடம் பதவிக்காலத்தை பூர்த்தி செய்யவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு திடீர் தேர்தலொன்றை ஜனாதிபதி நடத்தத் திட்டமிட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தத் தேர்தலை நடத்துவது தொடர்பாக, தனது ஆலோசகர்களுடனும் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலருடனும் கலந்துரையாடியுள்ள ஜனாதிபதி, அனைத்து உள்ளூராட்சி மன்றங்களையும் இந்தமாத இறுதிப் பகுதியில் கலைத்துவிட தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டிலுள்ள பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரம் ஐ.தே.கட்சியிடமே உள்ளது.

இன்னும் ஒரு வருடத்துக்கு அந்த அதிகாரங்கள் ஐ.தே.கட்சியிடம் இருந்தால் பிரதேச ரீதியாக அரசின்பலம் வீழ்ச்சியடையும் நிலை ஏற்படலாமென்பதனை கவனத்திலெடுத்த ஜனாதிபதி, இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டிலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளின் ஊதியத்தை கடந்த ஜனவரி மாதத்திலிருந்து அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்தாலும் உள்ளூராட்சி சபைகளை முன்பே கலைக்கவுள்ள காரணத்தால் அந்த ஊதிய உயர்வை எதிர்வரும் ஜூன் மாதம் வரை ஒத்திவைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் அரசாங்கத்தின் மீது எவ்வித நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர் என்பதைக் கண்டறியவே உள்ளூராட்சி சபைகளை முன்னரேயே கலைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(தே)

# தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்க விரைவில் விண்ணப்பங்கள் கோரப்படும்

(திருகோணமலை)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 1000 தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர சேவைக்கு உள்வாங்கும் திட்டத்தின்கீழ் வழங்கப்படாதிருந்த 143 தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனக்கடிதங்களை மாகாண கல்வி அமைச்சு வழங்கியுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கஷ்ட, அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களை நிரந்தர ஆசிரியர்களாக நியமிப்பதற்கான விண்ணப்பப்பத்திரம் அடுத்த வாரம் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு கோரவுள்ளதாக அதன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் கடமையாற்றியோர் ஜனவரி மாதம் முதல் நிரந்தர சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இவர்களை நிரந்தரச் சேவையில் சேர்த்துக் கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தை ஏற்கனவே வழங்கியுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் 857 பேருக்கான நியமனக்கடிதங்களை 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மூதூரில் புலிகளின்...

களின் ஆதரவாளர் ஒருவர் உயிரிழந்த அதேவேளை, மேலும் ஒரு துணைப்படை வீரர் படுகாயமடைந்தார். இந்தத் தாக்குதலை இராணுவச் சீருடை தரித்த ஒன்பது பேர் மேற்கொண்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை - பூநகர்ப் பகுதியைச் சேர்ந்த பொதுமகன் ஒருவர் வேட்டைக்குச் சென்றபோது கடந்த வியாழக்கிழமை இரவு 11 மணியளவில் இந்த சீருடைதரித்த ஆயுதபாணிகளால் பிடித்து வைக்கப்பட்டு, நேற்று அதிகாலை தாக்குதல் நடைபெற்ற பின்னரே விடுவிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்தப் பொதுமகன் கொடுத்த தகவலில் - 11 வியாழன் இரவு மணியளவில் தன்னை இராணுவ சீருடை தரித்தவர்கள் தடுத்து வைத்திருந்ததாகவும் - சிங்களத்திலும் தமிழிலும் அவர்கள் தன்னுடன் உரையாடியதாகவும் தெரிவித்தார். (10)

## நிர்வாக...

இரு தசாப்தகால யுத்தம் மற்றும் சுனாமியால் சிதைவடைந்த தமிழர் தாயக மீள் கட்டமைப்புப் பணிகள் தொடர்பாகவும், பொதுக்கட்டமைப்பு தொடர்பாகவும் நெதர்லாந்து அதிகாரிக்கு இந்தச்சந்திப்பின்போது அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் விளக்கிக்கூறினார்.

தமிழர் தாயகப்பகுதியில் மனிதாபிமான அடிப்படையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் அரசு புறக்கணித்து வருவது தொடர்பான தமிழ்மக்களின் கவலையையும் அவர் தெரிவித்தார்.

அமைச்சர்கள், எதிர்க்கட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடகவியலாளர்கள் அடங்கிய குழுவினரை சுனாமியால் சிதைவடைந்த தமிழர் தாயகப் பகுதிக்கு அரசு அனுப்பி வைத்து தமிழர் தாயகத்தின் உண்மை நிலையை அறியவேண்டும் என்றும் சு.ப.தமிழ்ச்செல்வன் அழைப்பு விடுத்தார்.

இந்தச்சந்திப்பின் போது ஏசியா ஓசியான் பிராந்திய துறையின் மூத்த கொள்கை வகுப்பாளர் டிக்கி மெத்ர்ஸ்ட் டிபி உடன் இருந்தார்.

## பாதாளக்...

பீற்றர்ஸ் பேராலயத்தின் தரைக்குக் கீழே அமைக் கப்பட்டுள்ள பாதாள அறையிலுள்ள கல்லறையில் நேற்று மாலை 5 மணியளவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

பாப்பரசரின் நல்லடக்கத்தை கர்தினால்களின் தலைவர் ஜோசப் ரட்ஜிங்கர் முன்னின்று நடத்தினார். சுமார் மூன்று மணிநேரம் நல்லடக்க நிகழ்ச்சி நடந்தது. இறுதிச்சடங்கு நிகழ்வுகளை வத்திக்கானிலுள்ள விசேட முகாம்களில் தங்கியுள்ள மக்கள் பார்வையிட வசதியாக தொலைக்காட்சிகள்மூலம் ஒளிபரப்புச் செய்யப்பட்டன.

பாப்பரசரின் இறுதிநிகழ்வில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், ஐ.நா.செயலர் கொபி அனான், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர், பிரான்ஸ் ஜனாதிபதி ஜக்ஸ் சிராக், பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ, ஈரான் ஜனாதிபதி முகமட் கதாமி, பலஸ்தீன பிரதமர் அகமட் உட்பட 200 இற்கும் மேற்பட்ட உலக மற்றும் மதத்தலைவர்கள் கலந்து கொண்டனர். இவர்களின் இருப்பிடத்திற்குப் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது. அத்துடன், வத்திக்கான் மீது விமானங்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இதற்காக ரோம் நகர விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது.

## பூநகர்...

திருகோணமலையில் நிலவும் அமைதியை சீர்குலைக்க இராணுவம் திட்டமிட்டுச் செயற்படுகிறது. இது திருகோணமலையில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என கண்காணிப்புக்குழுவிடம் தெரிவித்தோம்.

இதனிடையே நேற்று முற்பகல் 11 மணிக்கு திருகோணமலையின் சிங்களக் குடியேற்றப் பகுதியிலுள்ள மேன்காமம் என்ற இடத்தில் இராணுவத்தினர் ரோந்தில் ஈடுபட்டபோது சாதாரண உடையிலிருந்த நான்கு பேர் அவர்கள் மீது துப் பாக்கிச் சூடு நடத்தியதாகவும், அதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் தலையில் படுகாயமடைந்ததாகவும் இராணுவம் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளது.

ஆனால், இராணுவத்தின் முறைப்பாடானது, இருதரப்புக்கிடையிலும் குழப்பத்தை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்டதாகவே நாம் கருதுகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (10)

## வவுனியாவில்...

மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

இதேவேளை - இவருடன் சென்ற வரதர் அணியின் மற்றொரு உறுப்பினரைக் காணவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

இதுஇவ்வாறிருக்க - இந்தச் சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு அண்மையிலுள்ள கூமாங்குளத்தில் இரண்டு கைக்குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. துப்பாக்கிச்சூட்டை நடத்தியவர்களே இந்தக் கைக்குண்டுத் தாக்குதலையும் நடத்தியிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

(03)

# சீனப் பிரதமர் நேற்று கொழும்பு வந்துசேர்ந்தார்



(கொழும்பு)

சீனப் பிரதமர் வென்ஜியாயோ நேற்று மாலை 4.20 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

சீன அரசுக்குச் சொந்தமான விசேட விமானத்தில் வந்திறங்கிய அவரை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், பிரதி வெளிவிவகார அமைச்சர் விஸ்வ வர்ணபால மற்றும் மின்சக்தி எரிபொருள் அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த ஆகியோர் வரவேற்றனர்.

இரண்டு நாள் இலங்கையில் தங்கியிருக்கும் சீனப் பிரதமர் இலங்கையுடன் ஐந்து ஒப்பந்தங்களில் கைச்சாத்திடவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அமெரிக்க டொலர் | 99.11 | 100.03 |
| ஸ்ரேலிங் பவுண் | 184.87 | 187.51 |
| யூரோ | 126.61 | 128.76 |
| சுவிஸ் பிராங் | 81.31 | 83.22 |
| யென் | 0.9091 | 0.9266 |

WELCOME Mr.KARUNASENA
THE PLONEER BANKER, PEOPLE'S BANK



The Acting General Manager, People's Bank, Mr.T.Karunasena is a Leading well experienced Banker. May your visit motivate the staff here to render more service to our Region.

TWINNKLE STAR
173, Colombohamam Rd,
Chundikuli,
Jaffna.
(1115)

45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



ஜெனனம் 23.07.1976
வீரச்சாவு 25.02.2005

தமிழீழ கடற்புலிகளின் நிதிப்பொறுப்பாளர்
மேஜர் தயானந்தன்
(சின்னராசா தங்கவடிவேல்)

புன்னகை தவழும் முகத்துடன் எம் தம்பியாய் வலம் வந்தாயே!
கடற்புலியாகி தயானந்தன் எனப் பெயர் கொண்டாயே
சாதனைகள் நீ புரிந்து ஈழம் காண நினைத்தாயே.
காலன் நோய் வடிவில் வந்து உன் உயிர் பறித்தானே.
பதறி அழுதோமையா உன் குரல் கேட்கத் தவித்தோமையா – இன்றுடன்
நாற்பத்தி ஐந்து தினமோடி மறைந்ததையா.
உன்நினைவோ. எம்மைவிட்டு மறையவில்லை.
ஆண்டுகள் பல சென்றாலும் என்றும் மறவோமையா.

"உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்."

எமது தம்பியின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும், தொலைபேசி ஊடாகவும் எம் துயரில் பங்கெடுத்த போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, நாளை (10.04.2005) எமது வல்வெட்டித்துறை இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் வேண்டி நிற்கின்றோம்.

இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நெடியகாடு,
மானாங்கானை,
வல்வெட்டித்துறை.
(4025)

தகவல்:
சி.செயகுலசிங்கம், (செயத்தான்)
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.04.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தமிழ் பேசும் வைத்தியர்கள் அனைவரும் குடாநாட்டில் சேவையாற்ற முன்வரவேண்டும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி கோருகிறார்



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்திலும், ஏனைய பல்கலைக்கழகத்திலும் படித்த தமிழ் மருத்துவ மாணவர்கள் யாழ்.மாவட்டத்தில் சேவையாற்ற முன்வரவேணடும் என கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் -

வடக்கு - கிழக்கு என்பது யுத்தத்தாலும், பின்னர் சுனாமியாலும் பாதிக்கப்பட்ட ஓர் பிரதேசம். வீதிகள், பாடசாலைகள், மின்சாரம், வைத்தியசாலைகள் என எல்லாமே யுத்தத்தால் மிக மோசமாக அழிந்துபோன பிரதேசம். இன்று தமிழ் மக்களின் விடா முயற்சியாலும், அரசு - புலிகளுக்கிடையில் ஏற்பட்ட யுத்த நிறுத்தத்தாலும், படிப்படியாக புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகிறது.

இங்கு வீதிகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் போன்றவை முறையாக இயங்காவிடின், மீள்குடியேறிய மக்கள் மீண்டும் வேறு இடங்களை நோக்கிப் போகும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். பல இடங்களில் இவ்வாறு நடைபெற்றும் இருக்கிறது.

எனவே மீள் குடியேறிவரும் மக்களுக்குத் தேவையான சகல உதவிகளையும் செய்து கொடுப்பதென்பது நாடாளுமன்ற உறுப்பினர்களதும், அதிகாரிகளதும் கடமையாகும்.

அதி உயர் பாதுகாப்பு வலயம், இராணுவக் கெடுபிடிகள் போன்றவற்றால் மக்கள் மீளக்குடியேற முடியாமல் மிகவும் நொந்துபோய் இருக்கின்ற சூழ்நிலையில், மீளக்குடியேறியவர்களை சகல வழிகளிலும் காப்பாற்றுவதும், அவர்களுக்கான உதவிகளைச் செய்வதும் எமதெல்லோரதும் கடமையல்லவா.

இந்தவகையில் வைத்தியர்களாகிய உங்கள் பங்களிப்பு மிகவும் இன்றியமையாததாகும். ஒரு காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் வேலைசெய்ய வைத்தியர்கள் முண்டியடித்தார்கள். ஆனால் இன்று வைத்தியர்களைத் தேடி அலையவேண்டிய சூழ்நிலையில் யாழ்ப்பாண மக்கள் உள்ளார்கள்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தவிர்ந்த 42 வைத்தியசாலைகள் யாழ்.மாவட்டத்தில் இருக்கின்றன. இதில் 38 வைத்தியசாலைகள் இன்று இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஆனால், முழுமையாக அல்ல. வாரத்தில் இரண்டு நாள், மூன்று நாள் எனவும், இரவில் வைத்தியர்கள் இல்லாமலும் இருக்கின்றன.

ஏறத்தாழ 6 லட்சம் மக்கள் இப்பொழுது யாழ்.மாவட்டத்தில் இருக்கிறார்கள். இயங்கிக்கொண்டிருக்கும் இந்த 31 வைத்தியசாலைக்கும் ஏறத்தாழ 100 வைத்தியர்கள் தேவை. ஆனால், உள்ளவர்களோ 9 வைத்தியர்கள் மாத்திரமே. இன்னும் 35 வைத்தியர்கள் இளைப்பாறி பல வருடங்களாகியும், மீண்டும் மீண்டும் மீள் நியமனத்தில் இருக்கின்றார்கள்.

70, 75 வயதுக்கு மேற்பட்ட ஒரு சில வைத்தியர்களை நாம் கைத்தாங்கலாக அழைத்துவந்தே, அவரது கதிரையில் உட்கார வைக்கவேண்டிய நிர்ப்பந்தத்தில் நாம் இருக்கின்றோம். எனவே உண்மையான நிலவரம் என்னவெனில் - 100 வைத்தியர்கள் தேவையான இடத்தில் 9 வைத்தியர்கள் இருப்பதால், மிகுதி 91 இடங்கள் வெற்றிடமாக இருக்கிறது.

யாழ்ப்பாணத்திலும், மந்திகையிலும் சிங்கள வைத்தியர்கள் வந்து பணி புரிகிறார்கள். ஆனால் யாழ்.பல்கலைக்கழகத்திலும், ஏனைய பல்கலைக்கழகங்களிலும் படித்த தமிழ் மாணவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வர முன்வருவதாகவில்லை. இந்தச் சூழல் மாற்றியமைக்கப்படவேண்டும்.

வைத்தியத் தொழில் என்பது சேவை மனப்பான்மையுடன் கூடியது. மிக மோசமான யுத்த சூழ்நிலையிலும், யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய வைத்தியர்கள் இருக்கிறார்கள். இன்றும் பல வைத்தியர்கள் இரவு பகலாக செயற்பட்டு வருகிறார்கள்.

தபால் மூலம் பட்டப்படிப்பை மேற்கொள்ள விரும்பும் வைத்தியர்களுக்கும், யாழ்.போதனா வைத்தியசாலையில் சகலவிதமான வசதிகள் இருப்பதாக அறிகிறோம்.

எனவே, தபால் மூலம் பட்டப் படிப்பை முடித்தவர்களும், (முடிக்காதவர்கள் யாழ்ப்பாணத்தில் அதனைத் தொடர முடியும்) முடிக்காதவர்களும் யாழ்ப்பாண மக்களுக்கு தங்கள் சேவையை வழங்கமுடியும்.

யாழ்ப்பாணத்துக்கு வைத்தியர்கள் போதாது என நாம் அமைச்சரிடம் கேட்டால் - யாழ். வரவிரும்புவோரின் பெயர்ப் பட்டியலைத் தாருங்கள். நான் உடனடியாக மாற்றம் தருகிறேன் எனக் கூறுகின்றார்கள்.

எனவே, யாழ்ப்பாணம் வர விரும்பும் வைத்தியர்கள் - யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களையோ அல்லது யாழ்.மாவட்ட வைத்திய அதிகாரிகளையோ தொடர்புகொள்ளுமாறு வேண்டுகிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### நிர்வாக உத்தியோகத்தர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி - கண்டாவளை பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய கே. அமிர்தலிங்கம் கடந்த 6 ஆம் திகதி முதல் நல்லூர் பிரதேச சபை நிர்வாக உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ளார். (63)

### விபத்தில் காயம்!

மோட்டார் சைக்கிளும் - ஓட்டோவும் மோதிக்கொண்டதில் கே.சிவானந்தம் (வயது 33) என்பவர் காயமடைந்து, சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி - சங்கத்தானையில் இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

இதேவேளை, இந்த விபத்தைப் பார்த்துக்கொண்டு வீதியால் சைக்கிளைச் செலுத்திவந்தவர் - நாயுடன் மோதி விபத்துக்குள்ளானார். இந்தச் சம்பவத்தில் தினேஸ் (வயது 24) என்பவரும் காயமடைந்து, சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (29)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

ஓடிக்கொண்டிருந்த லான்ட்மாஸ்டரில் இருந்து தவறி விழுந்தவர் மீது லான்ட்மாஸ்டர் சில் ஏறியதில் மீசாலை கிழக்கைச் சேர்ந்த விக்னராஜா (வயது 24) என்பவர் காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (29)

## சின்னஞ்சிறு செய்திகள்

### படையினர்—மீனவர் சந்திப்புக்கு ஏற்பாடு

வடமராட்சியில் கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கும், படையினருக்கும் இடையில் சந்திப்பு ஒன்றை நடத்த போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சியில் குடியமர்ந்துள்ள மக்களை வளலாய் பகுதியில் மீளக் குடிய[illegible]ர்த்தல், வான் தோண்டல், பாஸ் கெடுபிடி போன்றவற்றில் ஏற்பட்டுள்ள இராணுவ நெருக்கீடுகளை பற்றிக் கலந்துரையாடவே இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கடற்தொழிலாளர் சங்க பிரதிநிதிகள் தெரிவித்தனர். (14)

### நட்சத்திர பாடகர் தெரிவுக்கான போட்டி

யாழ்ப்பாணத்தின் சிறந்த நட்சத்திரப் பாடகர் தெரிவுக்கான போட்டி இன்று காலை 8.30 மணிமுதல் - மாலை 5.30 மணிவரை அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிக்கு விண்ணப்பித்த அனைவரையும் அன்றைய தினம் போட்டியில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (55)

### ஆசிரிய ஆலோசகர் பதவி வெற்றிடம்

தீவக கல்வி வலயத்தில் நிலவும் விசேட கல்வி, ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரிய ஆலோசகர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1, தரம் 2 - 1, தரம் 2 - 11 ஐச் சேர்ந்த தகுதியானோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விசேட கல்விப் பாடத்துக்கு விண்ணப்பிப்பவர்கள் விசேட கல்வி தொடர்பில் விசேட பயிற்சியைப் பெற்றவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்களை தீவக கல்வி வலயத்துக்கு எதிர்வரும் 18.04.2005 இற்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வே.மகேந்திரன் கேட்டுள்ளார்.

### பொலிகண்டியில் வீடுகள் கையளிப்பு

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த மக்களுக்கு தற்காலிக வீடுகளைக் கையளித்த நிகழ்வு - கடந்த செவ்வாய்க்கிழமை வடமராட்சி பொலிகண்டி கிழக்கு கிராமத்தில் நடைபெற்றது.

பொலிகண்டி கிழக்கு கடற்தொழிலாளர் சங்கத் தலைவர் சி.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், வீட்டுத் தொகுதியை கையளிக்கும் நிகழ்வை யாழ்.கியூடெக் நிறுவன இயக்குநர் ஜெயக்குமார் அடிகளார் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து வீட்டுத்தொகுதியை சம்பிரதாய பூர்வமாக நாடா வெட்டி அவரே திறந்துவைத்தார். வீடுகளை இழந்த மக்களுக்கான வீட்டின் திறப்புகளை வடமராட்சி மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்பு வழங்கினார். (14)

## தென்மராட்சி வலய பாடசாலைகளில்

# புதுவருட பரிசுத் திட்டமொன்றை அமுல்படுத்துமாறு வேண்டுகோள்

(தென்மராட்சி)

தமிழ் - சிங்கள புத்தாண்டை ஒட்டி புதுவருட பரிசுத் திட்டமொன்றை தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் அமுல்படுத்துமாறு பாடசாலை அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் மாணவர்கள் கரங்களில் புத்தகமொன்றைப் பரிசாக வழங்கப் பெற்றோருக்குத் தெரியப்படுத்தல், விடுமுறைக் காலத்தில் அந்தப் புத்தகங்களை வாசித்துப் புதிய பாடசாலைத் தவணை ஆரம்பத்தில் அதனைப் பாடசாலை நூலகத்துக்கு வழங்குதல், பாடசாலையில் சேர்கின்ற புத்தகங்களின் அரைவாசியை சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் நூலகங்களுக்குப் பாடசாலையின் பெயரால் அன்பளிப்புச் செய்யுமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார். (29)

# வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்துமாறு கோரிக்கை!

(கோண்டாவில்)

கோண்டாவில் பகுதியிலுள்ள வீதிகள் இருளில் மூழ்கிக்கிடப்பதால், இரவு நேரங்களில் வீதிகளில் பயணிப்பதில் சிரமப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

கோண்டாவில் ஆஸ்பத்திரி வீதி, சென்.செபஸ்தியார் வீதி, குமரகோட்டம் வீதி மற்றும் இணுவில் காரைக்கால் வீதி - அத்துடன் அதனை அண்டிய பகுதிகளை இணைக்கும் வீதிகளே மின்விளக்குகள் பொருத்தப்படாமையால், இருள்சூழ்ந்த பிரதேசமாகக் காணப்படுகிறது.

இந்தப் பகுதிகளில் அண்மைக் காலமாக திருட்டுச் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. இவற்றோடு மட்டுமல்லாது கோஷ்டி மோதல்களும் இடம்பெற்று வருகின்றமையால், வீதியால் செல்வோரும், அந்தப் பகுதிகளிலுள்ள மக்களும் அச்சத்துடனேயே காலத்தைக் கழிப்பதாகத் தெரிகிறது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக கவனத்தில் எடுக்குமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (82)

# உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

தீவக கல்வி வலயத்தில் நிலவும் உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி), உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்) ஆகிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை ஆசிரிய சேவை தரம் I, தரம் 2:1 ஐச் சேர்ந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரிகள் வடக்கு - கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளருக்கு முகவரியிடப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்குமாறு, தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் வே.மகேந்திரன் கேட்டுள்ளார்.

# ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரல்!

தென்மராட்சி கல்வி வலயத்துக்கு வழிகாட்டல் ஆலோசனை சேவை, விசேட கல்வி ஆகிய துறைகளுக்கு ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆசிரியர் சேவை வகுப்பு -1 அல்லது 2-1 தரத்தையுடைய தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கமுடியும்.

அத்துடன் - வழிகாட்டல் ஆலோசனை சேவைக்கு விண்ணப்பிப்போர் அரச அரச சார்பற்ற நிறுவனங்களில் இந்த விடயத்தில் நான்கு மாதங்களுக்கு குறையாத பயிற்சி பெற்றவராகவோ அல்லது பட்டப்படிப்பில் உளவியல் ஆலோசனை சேவை பயின்றவராகவோ இருத்தல் வேண்டும்.

இதற்கு விண்ணப்பிப்போர் கல்வித் திணைக்களம், தேசிய கல்வி நிறுவனத்துக்குத் தமது விண்ணப்பங்களை 12.04.2005 இற்கு முன்பு அனுப்பவேண்டுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார். (29)

## வட இலங்கை சங்கீத சபை

# செயல்முறை பரீட்சைகள் 17 ஆம் திகதி ஆரம்பம்!

(சுதுமலை)

வட இலங்கை சங்கீத சபையால் நடத்தப்படும் இந்த ஆண்டுக்கான பரீட்சைகளில் தரம் ஒன்று முதல் நான்கு வரையான மாணவர்களின் செயல்முறைப் பரீட்சைகள் - இந்த மாதம் 17 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன.

சங்கீதம், நடனம், மிருதங்கம், வயலின், பண்ணிசை, நாடகமும் - அரங்கியலும் போன்ற பாடங்களுக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் இந்தச் செயல்முறைப் பரீட்சையில் தோற்ற முடியும்.

இந்தச் செயல்முறைப் பரீட்சைகள் - யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, கண்டி, மல்லாவி ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள மாணவர்களுக்கான செயல்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் ஜூன் மாத நடுப்பகுதியில் நடைபெறுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (91)

# கியான் மயானத்துக்குச் செல்லும் பாதையை புனரமைக்க கோரிக்கை

பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட கியான் மயானம் உரிய முறையில் பராமரிக்கப்படாததன் காரணமாக, மயானத்துக்குச் செல்லும் பாதை அழிவடைந்த நிலையில் பற்றைகள் நிறைந்து காணப்படுகிறது.

இந்த மயானம் பருத்தித்துறை பிரதேச சபை பகுதிக்குள் அடங்குகின்ற போதும் - பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மக்கள் பயன்படுத்துவதில்லை.

பெரும்பாலும் இதனை கரவெட்டி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட துன்னாலை வடக்கு, துன்னாலை தெற்கு பகுதி மக்களே பயன்படுத்தி வருவதால், இந்த மயானத்தை கரவெட்டி பிரதேசசபைக்குள் உட்படுத்தி அதனைப் புனரமைத்து ஆவன செய்ய வேண்டுமென, கரவெட்டி பிரதேச செயலகத்திடம் பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதையடுத்து பருத்தித்துறை பிரதேசசபையுடன் தொடர்புகொண்டு இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் உறுதியளித்துள்ளார். (13)

# சமாதான முன்னெடுப்பை துரிதப்படுத்துமாறு கோரி வவுனியா பொதுஜன அமைப்பு ஒன்றியம் அறிக்கை

(கிளிநொச்சி)

அரசு சமாதான முன்னெடுப்பை துரிதப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, வவுனியா மாவட்டத்தில் நாளை மறுதினம் நடைபெறவுள்ள எழுச்சிப் பேரணி தொடர்பாக, வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் - அரசுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்று வருடங்கள் நிறைவடைந்த போதிலும், நிரந்தர சமாதான முன்னெடுப்புகள் மந்த நிலையையே அடைந்துள்ளன. மாறாக மீண்டும் ஓர் யுத்தம் ஏற்படுமோ என்ற பீதியே மக்கள் மனங்களில் குடிகொண்டுள்ளது.

அத்துடன் மக்கள் குடியிருப்புப் பகுதிகள், வயல் நிலங்கள், பாடசாலைகள், பொதுக்கட்டடங்கள், பொதுப் போக்குவரத்துப் பாதைகள் தொடர்ந்தும் ஆயுத படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு, தம்வசப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கு மேலாக நிரந்தர சமாதானத்தை விரும்பாத தீய சக்திகளால் பொதுமக்கள், அரசியல் கடமைகளில் நிராயுதபாணிகளாகக் கடமையாற்றிக்கொண்டு இருக்கின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர்.

அத்தோடு ஆயுதப் படையினரின் மனித உரிமை அத்துமீறல், கெடுபிடி நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு, மீண்டும் மக்கள் பீதியுடனும், அச்சத்துடனும் வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, நிரந்தர சமாதானத்துக்குத் தடையாகவுள்ள சகல முட்டுக்கட்டைகளையும் இந்த அரசு உடைத்தெறிந்து, நிரந்தர சமாதானத்துக்காக உடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தும் ஓர் எழுச்சிப்பேரணி, நாளை மறுதினம் காலை 10 மணிக்கு வவுனியா மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டு, நகரசபை மைதானத்தைச் சென்றடைந்து அங்கு மகஜர் கையளிப்பு நிகழ்வு நடைபெறும்.

இந்த எழுச்சிப் பேரணியில் மக்கள் சக்தியை இந்த உலகுக்கு எடுத்துக்காட்டுவதற்காக சகலதரப்பட்ட மக்களையும் மிகவும் உணர்வுபூர்வமாகக் கலந்துகொள்ளுமாறு வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் அன்புடன் கேட்டுக்கொள்கிறது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(03)

## சொரூபம், விக்கிரகம் சேதம்

வவுனியா - கணேசபுரம் பிரதேசத்தில் கிறிஸ்தவ தேவாலயத்தின் சொரூபம் மற்றும் தேவாலயத்துக்கு அண்மையில் உள்ள அம்மன் ஆலய விக்கிரகங்கள் என்பன கடந்த புதன்கிழமை இரவு இனந்தெரியாதோரால் அடித்து நொருக்கப்பட்டு, வீதியில் வீசப்பட்டிருந்தன. இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (03)

## பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கு உதவி

(முல்லைத்தீவு)

சுனாமி கடற்கொந்தளிப்பின் தாக்கம் காரணமாக - முல்லைத்தீவில் தாய், தந்தையரை இழந்த 63 சிறுவர்களுக்கு நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

நெதர்லாந்து தமிழர் மனித உரிமைகள் அமைப்பின் உறுப்பினர்களால் வழங்கப்படவுள்ள இந்த நிதியுதவியை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சிறார்களின் பெயரில் வங்கியில் வைப்பிலிட்டு, முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் வைத்து வைப்புப் புத்தகங்கள் வழங்கப்படவுள்ளன.

முன்னரும் முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவு சிறுவர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (வெ)

## வவுனியாவில் கடும் காற்றால் மரங்கள் முறிந்து வீழ்ந்தன!

(வவுனியா)

வவுனியா பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை வீசிய கடும்காற்றினால், வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக இருந்த மரங்கள் முறிந்து மின்கம்பங்கள் மீது விழுந்ததால் 2 மின்கம்பங்கள் உடைந்து வீதிக்குக் குறுக்கே விழுந்தன. இதனால் ஏ-9 வீதியூடான போக்குவரத்து சிறிது நேரம் தடைப்பட்டிருந்தது.

வவுனியா நகரப் பகுதியில் சுமார் 500 மீற்றர் தூரத்துக்கு வீதியின் இருமருங்கிலும் மரங்கள் பற்றைகளாக அடர்ந்து வளர்ந்து காணப்படுவதுடன், பட்டமரங்கள் துப்புரவு செய்யப்படாமலும் காணப்படுகின்றன.

இது தொடர்பாக மக்கள் நகரசபையிடம் தெரிவித்தபோது - குறித்த பிரதேசம் தமக்குச் சொந்தமானது அல்ல. அது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானது எனத் தெரிவித்து, அதனை துப்புரவு செய்ய மறுத்துவிட்டனர். இதனால் இந்தப் பகுதி மக்கள் விசனமடைந்துள்ளனர். (03)




# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## ஏப்ரல் - 09

1667 : ஓவியக் கண்காட்சி முதன்முதலாக பாரிஸில் தொடங்கியது.

1909 : லண்டனில் வைட்நெஸ் கோப்பரேசன் கம்பனியால் முதன்முதலாக இரட்டைத்தள பஸ் அறிமுகப்படுத்தப்பட்டது.

1917 : உலகில் மக்களே தங்கள் ஆட்சியை சுயநிர்ணயம் செய்துகொள்வதற்கும், நிலையான சமாதானம் நிலவவும் நேசப் படைகளை ஆதரிப்பதாக ரஷ்யா அறிவித்தது.

◆ : பிரிட்டனில் உணவுப்பொருள் பதுக்கல் தடை சட்டம் கொண்டு வரப்பட்டது.

1918 : பிளாண்டாஸ் போர்க்களத்தில் 'லை' ஆற்றங்கரைப் பகுதியில் பிரிட்டிஷ் - போர்த்துக்கேய படையணிக்கு எதிராக ஜேர்மனி 2,000 தொன் நச்சுப்புகையைப் பயன்படுத்தியது.

1920 : ஜேர்மனியுடன் சமாதான ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு அமெரிக்க காங்கிரஸ் முழுமையான ஆதரவை அளித்தது.

1922 : யானைக்கால் நோய் ஒருவகை நுளம்பினால் பரவுகிறது என்பதைக் கண்டுபிடித்த பிரிட்டிஷ் மருத்துவ விஞ்ஞானி சேர் பட்ரிக் மான்ஸன் லண்டனில் காலமானார்.

1942 : பிலிப்பைன்ஸில் 'லூஸான்' என்ற இடத்தில் நேசப்படைகள் ஜப்பானிடம் சரணடைந்தன. அமெரிக்க வீரர்கள் 12 ஆயிரம் பேர் உட்பட 75 ஆயிரம் வரையான வீரர்கள் போர்க் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு, 160 கி.மீ தூரத்திலுள்ள முகாமுக்கு கால்நடையாக அழைத்துச்செல்லப்பட்டனர்.

◆ : இரண்டாம் உலகப்போர் முடிவுபெற்றதும் இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்குவதாக பிரிட்டிஷ் அரசு அறிவித்தது.

1965 : 'ரான் ஒப் கட்ச்' பகுதியில் இந்திய - பாகிஸ்தான் படைகளுக்கிடையே போர் மூண்டது.

1980 : 'சோயுஸ் - 35' என்ற விண்கலம் ஏவப்பட்டது. இந்த விண்கலத்தில் சென்ற விண்வெளி வீரர்களான லியோனிட் போப்பாவ், வலேரி ரையுமின் ஆகியோர் 185 நாட்கள் விண்வெளியில் தங்கியிருந்தனர்.

1989 : சோவியத் யூனியனில் இருந்து தனியாகப் பிரிந்து செல்ல விரும்பி ஜோர்ஜியா குடியரசில் பெரும் ஆர்ப்பாட்டங்கள் பரவலாக ஆரம்பித்தன.

1991 : போலந்திலிருந்து சோவியத் வெளியேற்றம் ஆரம்பமாகியது.

◆ : ஜோர்ஜியா தான் விடுதலை அடைந்ததாக பிரகடனம் செய்தது.

1992 : கோயில்களையும், சிலைகளையும் பாதுகாப்பதற்கென ஒரு தனி பொலிஸ் படை தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டது.

◆ : 151 ஆண்டுகளாக பிரிட்டனில் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருந்த 'பஞ்ச்' என்ற நகைச்சுவை வார இதழின் இறுதி இதழ் வெளியாகியது.

1993 : ஓசோன் அடுக்குகளை ஆய்வுசெய்யும் நோக்கோடு ஐந்து விண்வெளி வீரர்களுடன் டிஸ்கவரி விண்கலம் தனது பயணத்தை தொடங்கியது.

தொகுப்பு - சந்துரு

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் வடமராட்சி கிழக்கில் 130 வீடுகள் கையளிப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட இரு இடங்களில் 100 தற்காலிக வீடுகளைக் கொண்ட இரு குடியிருப்புகள் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் திறந்துவைக்கப்பட்டன.

கட்டைக்காடு பகுதி I வீடுகள் கையளிப்பு நிகழ்வு - அண்மையில் மக்கள் வீடமைப்புக்குழுத் தலைவர் சு.முத்துராசா தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் பொதுச்சுடரை தமிழர் புனர்வாழ்வுக்கழக வடமராட்சி கிழக்குப் பொறுப்பாளர் யூட், வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் நிலவன், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் மு. தங்கவேலு ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் அமைக்கப்பட்ட 70 வீடுகளை தமிழர் புனர்வாழ்வுக்கழக வடமராட்சி கிழக்குப் பொறுப்பாளர் யூட் திறந்துவைத்து, மக்களிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் சிறப்புரையை வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலாளர் கொ.அ.ஸ்ரனிஸ்லாஸ் நிகழ்த்தினார்.

சோஆ நிறுவனத்தால் அமைக்கப்பட்ட கட்டைக்காடு பகுதி II 30 வீடுகளை சோஆ நிறுவனத்தைச் சேர்ந்த நடா திறந்துவைத்து, வீட்டுச் சாவிகளை மக்களிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் சுனாமி கடல் அனர்த்த செயணிக்குழு செயலகத்தின் இணைப்பாளர் சுடர்மணி, யாழ். மாவட்ட கடற்புலிகளின் தளபதி சலீம், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மேலாளர் காதர், தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்கள், கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள், போராளிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, வடமராட்சி கிழக்கு மாமுனை கிராமத்திலும் 30 தற்காலிக குடியிருப்பு வீடுகள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் திறந்துவைக்கப்பட்டன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த கண்ணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் -பொதுச்சுடரை வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் யாழ்மன்னன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த யூட் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இந்த நிகழ்வின் சிறப்புரையை வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மேலாளர் காதர் நிகழ்த்தினார்.

வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் கல்விக் கழகப் பொறுப்பாளர் அண்ணாத்துரை தற்காலிக குடியிருப்புகளைத் திறந்துவைத்து, சாவிகளைப் பொதுமக்களிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் நிலவன், வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் மு. தங்கவேலு, செயலாளர் கொ.அ.ஸ்ரனிஸ்லாஸ், கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நிர்வாக சேவையினர், தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்கள், கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (21)

## கடும் மழையால் நெற்செய்கை பாதிப்பு!

புதுக்குடியிருப்பில் கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் மழை காரணமாக நெற்செய்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

விவசாயிகள் அறுவடையை மேற்கொண்டுள்ள வேளையில் மழை பெய்துவருவதால் - விவசாயிகள் பெரும் அழிவுகளைச் சந்தித்து வருகின்றனர்.

சிறிது காலத்துக்கு முன்னர் நெற்பயிர்களில் ஏற்பட்ட ஒரு நோய்த் தாக்கத்தால் பாதிப்படைந்த விவசாயிகள், தற்போது எஞ்சியுள்ள நெற்பயிர்கள் மழை காரணமாகப் பாதிப்படைவதாலும் பெரும் கவலையடைந்துள்ளனர். (வெ)

# வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்தின் கட்டட திறப்பு விழாவும், பொன் விழாவும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - வன்னேரிக்குளம் மகா வித்தியாலய பொன் விழா நிகழ்வும், புதிய கட்டடத் திறப்பு விழாவும் நாளைமறுதினம் பிற்பகல் 4 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சு.தர்மரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராஜநாயகம், கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் குருகுலராஜா, கிளிநொச்சி பிராந்திய மாநகர சுகாதாரப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி, முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் அரியரத்தினம், கரைச்சி பிரதேச செயலர் க.சுலோஜினி, கிளிநொச்சி பிராந்திய திட்டமிடல் கல்விப் பணிப்பாளர் பத்மநாதன், கல்வி அபிவிருத்தி பிராந்திய கல்விப் பணிப்பாளர் மார்க்கண்டு, நிர்வாக பிராந்திய கல்விப்பணிப்பாளர் சின்னராசா, கரைச்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் அரியரத்தினம், வைத்திய கலாநிதி முருகானந்தன், ஜெகதீஸ்வரக் குருக்கள், பங்குத்தந்தை ஜெயபாலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, கிளிநொச்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவாணன், கிளிநொச்சி கல்விக் கழகப் பொறுப்பாளர் ஜீவராஜ், கிளிநொச்சி மாணவர் அமைப்பு பொறுப்பாளர் நளன், அக்கராயன் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் திருமாறன், கிளிநொச்சி தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை, அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவையைச் சேர்ந்த சபாரட்ணம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வின் இரவு நிகழ்வுகளாக பரிசளிப்பு நிகழ்வு, மாணவர் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு, கலைநிகழ்வுகள் என்பன இடம்பெறும்.

## லொறி குடைசாய்ந்தது

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

கொழும்பிலிருந்து புதுக்குடியிருப்பில் உள்ள 'வேல்ட் விஷன்' நிறுவனத்துக்கு பொருட்களைக் கொண்டு வந்து இறக்கி விட்டு திரும்பிச்செல்லும் வேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

(வெ)